بسم الله الرحمن الرحيم نحمده ونصلي على رسوله الكريم وعلى عبده المسيح الموعود
وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 4

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian TAMIL

இதழ் 45

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

09 ரபீவுல் அவ்வல் 1441 ஹிஜ்ரி கமரி 07 நுபுவ்வத் 1398 தப்லீக் ஹிஜ்ரி ஷம்ஸி
07 நவம்பர் 2019


## அல்லாஹ்வின் கட்டளை

رَبَّنَا اغْفِرْ لَنَا ذُنُوبَنَا وَإِسْرَافَنَا فِيٓ أَمْرِنَا وَثَبِّتْ أَقْدَامَنَا وَانْصُرْنَا عَلَى الْقَوْمِ الْكٰفِرِينَ

எங்கள் இறைவா! எங்கள் (குறைபாடுகளாகிய) குற்றங்களையும், மீறுதல்களையும் எங்களுக்கு மன்னித்தருள்வாயாக. எங்கள் காலடிகளை உறுதிப்படுத்தவாயாக. மேலும் நிராகரிக்கும் மக்களுக்கு எதிராக எங்களுக்கு உதவி செய்வாயாக. (3:148)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**இந்த முன்னேற்றம் அடைந்த காலத்தில் இஸ்லாத்தை ஆதரவற்ற நிலையில் விட்டு விடவில்லை. மாறாக, அவன் இஸ்லாத்தைப் பாதுகாத்தான். மேலும் தன்னுடைய உண்மையான தூதர் (ஸல்) அவர்களின் வாக்குறுதியை உண்மை என நிரூபித்துக் காட்டினான். அன்னாரின் அருளுக்குரிய முன்னறிவிப்பின் உண்மைத்துவத்தை வெளிப்படுத்தி விட்டான். மேலும் இந்த நூற்றாண்டில் ஒரு நபரை தோற்றுவித்தான்**

**நீங்கள் அனைவரும் அல்லாஹ்வின் புறமிருந்து அனுப்பப்பட்டவருடன் ஓர் உறுதிவாய்ந்த தொடர்பை ஏற்படுத்தி உள்ளீர்கள். ஆகவே அவருடைய கூற்றுக்களை உள்ளத்தின் காதுகளைக் கொண்டு கேளுங்கள். மேலும் அவற்றைச் செயல்படுத்துவதற்காக எப்போதும் ஆயத்தமாக இருங்கள்**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

### தப்பெண்ணம்

தப்பெண்ணம் என்பது எப்படிப்பட்ட ஒரு நோய் மற்றும் மோசமான விஷயம் என்றால் அது மனிதனை குருடனாக்கி அழிவின் இருள் என்ற கிணற்றில் தள்ளி விடுகின்றது. இந்த தப்பெண்ணம் தான் ஒரு மரணித்த மனிதனை வணங்கத் தூண்டியது. இந்த தப்பெண்ணம்தான் இறைவனின் படைத்தல், கருணையாளன், வாழ்க்கைக்கு தேவையானவற்றை வழங்குபவன் ஆகிய பண்புகளைப் பொய்யாக்கி அவனை ஒரு பயனற்ற பொருளாக ஆக்கிவிட்டது. இந்த தப்பெண்ணத்தின் விளைவாகத்தான் நரகத்தின் மிகப்பெரும் பகுதி அல்லது முழுப் பகுதியும் நிறைந்து காணப்படும் என்று கூறினால் அது மிகையாகாது.

எவர்கள் எல்லாம் வல்ல அல்லாஹ்வால் அனுப்பப்பட்டவர்கள் தொடர்பாக தப்பெண்ணம் கொள்கின்றார்களோ அவர்கள் இறைவனின் அருட்கொடைகள் மற்றும் அவனுடைய கருணையை மிகவும் கீழ்த்தரமான கண்ணோட்டத்துடன் பார்க்கின்றவர்களாவார்கள். எவராவது இறைவன் தன்னுடைய கரத்தால் நிலைநாட்டிய இந்த இயக்கத்தை புறக்கணிப்பரேயானால் அந்தோ! ஓர் ஆன்மா அழிவின் கதவுகளின் சங்கிலியைத் தட்டுகிறதே என்று நமக்கு மிகவும் வருத்தம் ஏற்படும். மேலும் இது எப்படிப்பட்ட ஒரு ஒளிமிகுந்த இயக்கம் என்றால் நல்லுள்ளம் கொண்ட எந்த நபராவது இரண்டு மணி நேரம் நம்முடைய விஷயத்தைக் கேட்டால் அவர் உண்மையைப் பெற்று விடுவார்.

### ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நல்லொழுக்க அற்புதங்கள்

நான் தற்போது ஒரு சில விஷயங்களை மட்டும் கூறிவிட்டு எனது உரையை முடிக்க விரும்புகின்றேன். நான் தற்போது அற்புதங்கள் தொடர்பாக அதாவது அற்புதங்களில் முதலாவது வகையான அற்புதம் (ஷக்குல் கமர்) என்று கூறப்படுகின்ற சந்திரன் பிளப்பது போன்ற அறிவு சார்ந்ததாகும்.

இரண்டாவது வகை, உண்மை நிலை மற்றும் ஞானத்தை கண்டறிதல் ஆகும்.

அற்புதங்களின் மூன்றாவது வகை, நல்லொழுக்கத்தின் மூலம் வெளிப்படுகின்ற அற்புதங்கள் ஆகும். நல்லொழுக்க அற்புதங்களின் மூலம் மிகப்பெரும் தாக்கம் ஏற்படுகிறது. தத்துவஞானிகளின் நிலை உண்மை மற்றும் ஞானத்தைக் கொண்டு அவர்கள் மனநிறைவு பெறுவதில்லை. ஆனால் நல்லொழுக்கம் அவர்கள் மீது மிகப்பெரும் மற்றும் ஆழிய தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

நபிமார்களுக்கெல்லாம் தலைவராகத் திகழ்ந்த ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நல்லொழுக்க அற்புதங்களில் இதுவும் ஒன்றாகும். அதாவது ஒருமுறை அன்னார் ஒரு மரத்தின் கீழ் உறங்கிக் கொண்டிருந்தார்கள். திடீரென உரத்த குரலில் யாரோ அன்னாரை அழைப்பதுபோல் வந்த ஓசையைக் கேட்டு அன்னார் கண் விழித்தார்கள். அப்போது ஒரு காட்டரபி தன் கையில் வாளை ஏந்தியவாறு அவர்களுக்கு முன்னால் நிற்பதை அவர்கள் கண்டார்கள். மேலும் அவன், முஹம்மதே! (ஸல்) தற்போது என்னிடமிருந்து உம்மை யார் காப்பாற்றுவார் எனக் கேட்டார்? அன்னார் பெற்றிருந்த உறுதிவாய்ந்த உண்மையான நம்பிக்கை மற்றும் மனநிறைவின் வெளிப்பாடாக அல்லாஹ் என அன்னார் பதிலளித்தார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறியது சாதாரண மனிதர்கள் கூறுவது போன்று அல்ல. அல்லாஹ் அனைத்துப் பண்புகளையும் தன்னகத்தே ஒருங்கே இணைத்துக் கொண்டவன். அல்லாஹ் என்ற அந்தப் பெயர் எவ்வாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாயில் இருந்து வெளியேறியதோ,

*(தொடர்ச்சி 8 வது பக்கம்...)*

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**அல்லாஹ்வின் இருப்பின் மீது முழுமையான நம்பிக்கை இருக்கும்போதுதான் மறுமையைப் பற்றிய கவலை இருக்கும்**

**நிரந்தரமாக நிலைத்திருக்கக் கூடியவற்றிற்காகத் தற்காலிகப் பொருள்களைத் தியாகம் செய்பவரே உண்மையான அறிவுள்ள மனிதர் ஆவார்**

**வெளிப்படையான தோலாக மட்டும் இல்லாமல் அதில் ஆன்மாகவும், சத்தாகவும் இருக்க வேண்டும்**

**மறுமையைப் பற்றி அஞ்சக்கூடியவர் மற்றும் அல்லாஹ்வின் மீதான அச்சத்தைக் கொண்டிருப்பவர், முதலில் தமது இறைவணக்கத்தைப் பாதுகாப்பதன் பக்கம் கவனம் செலுத்துகின்றார்**

**குறித்த நேரத்தில் தொழுகையை நிறைவேற்றுவது அவசியமாகும்**

**அல்லாஹ் கூறுகின்றான்: எந்தப் பள்ளிவாசல் இறையச்சத்தை அடிப்படையாகக் கொண்டு கட்டப்பட்டதோ அந்த பள்ளிவாசலில்தான் தொழுகைக்காக நிற்க வேண்டும்**

**உண்மையான இறை அடியார் எல்லா வகையான நன்மைகளையும் மேற்கொள்வதற்கு முயற்சி செய்வார்**

**ஒருவர் மற்றொருவருடனான தொடர்பில் இறைவனுக்காக அன்பு செலுத்தக் கூடியவர்களும், மேலும் மென்மையாக நடந்து கொள்பவர்களும்தான் உண்மையான இறையச்சத்தில் நிலைத்திருக்கக் கூடியவர்கள் ஆவர்**

**பைஅத் நிபந்தனைகளில் உண்மையான முறையில் நிலைத்திருப்பது, மேலும் அதற்கேற்ப வாழ்க்கையைக் கழிப்பதற்கு ஹுஸூர் அவர்கள் கவனமூட்டினார்கள்**

**இந்த ஜுமுஆ குத்பாவுடன் பிரான்ஸ் நாட்டின் 47 வது ஆண்டு மாநாடு துவங்கியது**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **பிரான்ஸ்ட் மாநாட்டுத் திடலில் 04 அக்டோபர் 2019** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1398 -ஆம் ஆண்டு **அஹா** மாதம் **04 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ- اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ- اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ- صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

அல்லாஹ்வின் அருளால் இன்று உங்களுடைய ஆண்டு மாநாடு தொடங்குகிறது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மாநாட்டிற்கு மாசற்ற முறையிலான மார்க்க ஒன்று கூடல் என்ற பெயரை வைத்தார்கள். எனவே இதில் கலந்து கொள்கிற ஒவ்வொருவரும் நினைவில் கொள்ள வேண்டும். மார்க்க அறிவு ரீதியான ஆன்மீக முன்னேற்றத்திற்காக இன்று நாம் இங்கு ஒன்று கூடியிருக்கிறோம். மூன்று நாள் நாம் இந்த சிந்தனையுடனும் கவலையுடனும் இங்கு ஒன்று கூட வேண்டும். நாம் எவ்வாறு நமது மார்க்க அறிவு மற்றும் ஆன்மீக நிலையை மேம்படுத்துவோம் என்ற எண்ணம் இருக்க வேண்டும்.

இந்த சிந்தனை இல்லா விட்டால் இங்கு வருவது பயனற்றதாகும். இக்காலக்கட்டத்தில் உலகம் இறைவனை மறந்து கொண்டிருக்கிறது. ஒவ்வொரு மார்க்கத்தைச் சேர்ந்தவரும் தமது மார்க்கத்தை விட்டு விலகுகிறார். ஒவ்வொரு வருடமும் அத்தகைய மக்களின் எண்ணிக்கை அதிகரிக்கிறது. அதிலிருந்து ஒரு பெரும் எண்ணிக்கை இறைவனது இருப்பை மறுப்பதை அறிந்து கொள்ள முடிகிறது.

எந்த அளவுக்கு எனில் முஸ்லிம்களின் இருப்பும் நம்மிடம் தெரிவிப்பதாவது, அவர்கள் பெயரளவுக்கு முஸ்லிம்களாக இருக்கின்றனர். உலகியல் சிந்தனை அவர்களிடம் மிகைத்துள்ளது. அத்தகைய நிலையில் நாமும், நாங்கள் காலத்தில் இமாமை ஏற்றுக் கொண்டுள்ளோம் என்று வாதம் செய்கிறோம்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய முன்னறிவிப்பிற்கேற்ப அல்லாஹ் இக்காலத்தில் மார்க்கத்தைப் புதுப்பிக்க அன்னாரை அனுப்பினான் என்று நம்புகிறோம். நமது வாக்குறுதியோ நாமும் அந்த வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் வாக்களிக்கப்பட்ட மஹ்தியின் மிஷனைப் பூர்த்தி சொய்வோம் என்பதாகும். நாம் நமது நிலைமைகளை மேம்படுத்த முயற்சி செய்யவில்லை எனில் நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய பைஅத்தின் கீழ் வந்தது ஒரு வெளிப்படையான அறிவிப்பாகவே இருக்கும். உயிரற்றதாகும். நமது பைஅத் வாக்குறுதி பெயரளவிலானதாகும். அதனை நாம் பூர்த்தி செய்வதில்லை. நாம் இங்கு மாநாட்டிற்காக ஒன்று கூடியது உலகியல் திருவிழாவில் ஒன்று கூடுவது போன்றாகி விடும். எனவே ஒவ்வொரு அஹ்மதிக்கும் இது சிந்திக்க வேண்டிய இடமாகும். கவலையுடன் நம்மைப் பற்றி ஆய்வு செய்வது அவசியமாகும். திருவிழா என்ற இந்த சிந்தனை இருக்கும் எனில் பயனற்றதாகும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மாநாட்டின் நோக்கங்கள் குறித்து நம்முன் எடுத்து வைத்துள்ளார்கள். நாம் அதனை முன் வைத்து நம்மை ஆய்வு செய்ய வேண்டும். நாம் இந்த மூன்று நாட்களில் நோக்கங்களை மட்டும் நிறைவேற்றினால் போதாது. மாநாட்டில் கலந்து கொள்பவர்களுக்காக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் செய்த துஆக்களைப் பெறுபவர்களாக ஆக வேண்டும். அதனை நமது வாழ்வில் நிரந்தர அங்கமாக ஆக்க வேண்டும். நமது உலகையும் மறுமையையும் பெற்றடைந்தவர்களாக ஆக வேண்டும்.

நமது நிலைமைகளை நல்ல செயல்களைச் செய்வதற்காக முயற்சி செய்தல் மற்றும் அதன்படி செயல்படுதல் ஆகியவை நமது வருங்கால சந்ததிகளிடமும் நிலைத்து நிற்க வேண்டும். மேலும் அவர்களும் இறைவனது அருள்களைப் பெறுபவர்களாக ஆக வேண்டும். உலகம் இறைவனை விட்டு அகன்று கொண்டிருக்கிறது. இந்நிலையில் நமது சந்ததிகள் இறைவனை நெருங்க வேண்டும். நமது சந்ததிகள் உலகை இறைவன் பக்கம் கொண்டுவரக்

காரணமானவர்களாக இருக்க வேண்டும். எனவே நாம் நமது பைஅத் உடன்படிக்கையை நிறைவேற்ற வேண்டும். நமது சந்ததிகளைப் பாதுகாக்க வேண்டும். பிறகு இந்த நோக்கங்களை நாம் கண் முன் நிறுத்த வேண்டும். மூன்று நாட்கள் மாநாடு நடத்தப்படுகின்ற வேளையில் இந்த எண்ணத்துடன் கழிக்க வேண்டும். இவ்விஷயம் நமது வாழ்வின் எப்போதுமே இருக்க வேண்டும் என்ற எண்ணம் இருக்க வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மாநாட்டின் இந்த நோக்கங்களை விளக்கியவாறு கூறுகின்றார்கள்:

மறுவுலகம் குறித்த கவலை இருக்க வேண்டும். இதற்காகவே தமது மறுவுலகைப் பற்றிக் கவலை கொள்ள வேண்டும். இறைவனைப் பற்றிய பயம் இருக்க வேண்டும். தக்வா அவர்களிடம் உருவாக வேண்டும். மென்மையான உள்ளம் உருவாக வேண்டும். ஒருவருக்கொருவர் அன்பு, சகோதரத்துவம், அர்ப்பணிப்பு உருவாக வேண்டும். எளிமை, பணிவு உருவாக வேண்டும். உண்மையின் மீது நிலைத்து நிற்க வேண்டும். மார்க்கத்திற்குப் பணி செய்வதற்காக ஒரு வேகம் இருக்க வேண்டும.

ஆகவே இதுவே நாம் இங்கு ஒன்று கூடுவதன் நோக்கமாகும். அன்னாரை ஏற்றுக் கொண்ட ஒவ்வொருவரும் ஆண், பெண், வாலிபர், வயோதிகர் அனைவருக்கும் அன்னாரது வழிகாட்டலுக்கேற்ப மறுமை குறித்து எந்த அளவுக்கு கவலை இருக்க வேண்டும் எனில் அதற்கு எதிரில் இந்த பொருட்கள் எந்தப் பொருட்டாகவும் இருக்கக் கூடாது. இந்த உலகாதார நோக்கம் கொண்ட உலகில் வாழ்ந்து கொண்டு இருக்கிற நிலையில் இது ஒரு பெரும் பணியாகும். இது ஒரு பெரும் சவால் ஆகும். இதனை நிறைவேற்ற பெரும் ஜிஹாது செய்ய வேண்டியதுள்ளது.

மறுமை உடைய கவலை ஏற்படுவதற்கு இறைவனது இருப்பில் முழுமையான திட உறுதி இருக்க வேண்டும். இந்த உலகம் சில நாட்கள் தான். அதிகமதிகம் ஒருவர் 80 ஆண்டுகள் வாழலாம். 90 ஆண்டுகள் வாழலாம். ஒருவர் 100 ஆண்டுகள் வாழலாம். ஆனால் இந்தக் காலம் எல்லாம் கூட ஒவ்வொருவருக்கும் கிடைப்பதில்லை. பெரும்பாலார் அதற்கு முன்னரே உலகை விட்டுச் சென்று விடுகின்றனர். அதற்குப் பிறகு மறுமை வாழ்வு உள்ளது. அது நிரந்தரமானது. எனவே அறிவுள்ள மனிதன் தற்காலிக பொருளை நிரந்தரப் பொருளுக்காக தியாகம் செய்வான். ஆனால் நடப்பது என்னவெனில் நாம் இந்தத் தற்காலிகப் பொருளுக்கு தற்காலிக வாழ்வுக்காக நிரந்தர வாழ்வைத் தியாகம் செய்து விடுகிறோம். பிறகு இந்த உலகியல்வாதிகள் தம்மை பெரிய அறிவாளி என்றும் கருதிக் கொள்கின்றனர்.

எனவே ஒரு நம்பிக்கையாளர் இதற்கு நேர்மாறாக இருக்கிறார்; இருக்கவும் வேண்டும். அப்போதுதான் நம்பிக்கையாளர் என்று அழைக்கப்படுவார். அவர் தனது உள்ளத்தில் இறைவனது பயம் கொண்டவராக இருக்கிறார். அல்லாஹ்வின் அச்சம் அவரது மனதில் இருக்கும். அல்லாஹ்வின் மீது அன்பு எல்லா உலகியல் அன்பையும் விட மிகைத்திருக்கும். அச்சம் பயம் ஆகியவை இறைவன் மீது ஏற்படக் காரணம் மரணத்திற்குப் பிறகுள்ள வாழ்வில் தண்டனை கிடைத்து விடும் என்பதற்காக அன்று.

மாறாக அதற்குக் காரணம் எனது அன்புக்குரிய இறைவன் என் மீது கோபப்பட்டு விடக் கூடாது என்பற்காகவாகும். இந்த அன்பின் உணர்வு இருக்கும் என்றால் அப்போது மனிதன் இறைவனது கட்டளையின்படி செயல்படுவதற்கு முயற்சி செய்வார். அவனது ஒவ்வொரு உலகியல் பணிகளும் மறுமையை முன்னிறுத்தியவாறு இருக்கும். எனது இறைவனே என்னைப் பராமரிக்கும் பணியைச் செய்கிறார் என்றும் எனது இறைவனே தனது நிஃமத்(அருள்)களை வழங்குகிறான் என்றும் அவருக்கு ஒரு திட உறுதி இருக்கும். அதில் எல்லா வகையான அருள்களும் இருக்கும் என்றும் உலகியல் மற்றும் ஆன்மீக அருள்களும் அதில் அடங்கும் என்றும் கருதுவார். நான் அவனது வணக்கத்தின் உரிமையை நிலைநாட்டி வந்தால் அந்த இறைவனை எல்லா ஆற்றல்களின் அரசன் என்றும் கருதியவாறு அவனுக்கு முன்னால் குனிபவனாக இருந்தால் அவனது அருள்களிலிருந்து பங்கு பெற்றுக் கொண்டே செல்வேன் – இன்ஷா அல்லாஹ்.

நான் அவன் கூறிய ஏவல் விலக்கல்களுக்கேற்ப வாழ்வைக் கழித்து வந்தால் அவனது அருள்களுக்கு வாரிசாகிக் கொண்டிருப்பேன். அல்லாஹ்வுக்கு முழுமையாக கட்டுப்பட்டவாறு தக்வாவின் மீது நிலைத்து நின்றவாறு அவனுடைய உரிமை மற்றும் அவனுடைய அடியார்களின் உரிமையை வழங்கி வந்தால் அவன் என்னுடன் திருப்தி கொள்வான் என்ற இந்த சிந்தனை இருக்கும் எனில் அதற்கேற்ப செயல் இருக்கும் எனில் நிச்சயமாக அல்லாஹ்வின் வாக்குறுதிக்கேற்ப அவனது வெகுமதிகள் மற்றும் அருள்களைப் பெறுவராக ஆக்கி விடும். இவர்களே தக்வாவின் படி செல்வபவர்களாக இருப்பர். அவர்கள் அல்லாஹ்வின் எல்லா கட்டளைகளின்படியும் செயல்படுபவர்கள் ஆவர். அவர்களின் உள்ளம் மென்மையாக இருக்கும். அவர்களின் உள்ளத்தில் எப்போதும் இறைவன் இருக்கிறான். இவர்களிடம் ஒருவர் மற்றவரிடம் இறைவனுக்காக அன்பு காணப்படும். அவர்களின் அன்பும் சகோதரத்துவமும் சொந்த நோக்கங்களுக்காக இருப்பதில்லை.

மாறாக முழுக்க முழுக்க இறைவனுக்காக இருக்கிறது. அவர்கள் தக்வாவின்படி செல்பவர்களாக இருப்பர். அவர்களிடம் பணிவு காணப்படும். பணிவின் தரத்தை தகுதி வித்தியாசப்படுத்தி செல்வந்தரிடம் அவருடைய செல்வத்திற்காக பணிவு காட்டுவதில்லை. அவர்களிடம் அவர்கள் பெரிய மனிதர்கள் என்பதற்காக மட்டும் பணிவு காட்டுவதில்லை. அவர்கள் திகில் கொள்ளத்தக்கவர். உலகியலில் பெரியவர் என்பதற்காகவன்றி ஏழைகளிடம் கூட பணிவுகளுடன் நடந்து கொள்வர். இத்தகையவர்களே உண்மையின் மீது எப்போதும் நிலை நிற்பவர்கள் ஆவர். அவர்கள், நேர்மையான பேச்சுதான் இறைவன் வரை கொண்டு சேர்க்கும் என்று அறிந்திருப்பர்.

பொய் இணை வைப்பின் பக்கம் எடுத்துச் செல்லும். மறுமை உடைய கவலை இருந்தால் இறைவன் மீது பயம் இருந்தால் தக்வாவின் உண்மையை அறிவர். பிறகு ஒருவர் நம்பிக்கையாளர் என்று கூறிக் கொண்டு பொய் எவ்வாறு பேச முடியும்? இந்த நிலையைப் பெறுவர் மற்றும் நன்மையின் உயிரை உணர்ந்தவர். மார்க்கத்தின் பணியிலும் உண்மையிலேயே வேகமாக இருப்பர். அதுவன்றி தொண்டுகளும் கூட சுயநலனுக்காக ஆகி விடும்.

நாம் பார்க்கிறோம். முஸ்லிம்களிடம் நூற்றுக்கணக்கான அறிஞர்கள் உள்ளனர். அவர்கள் மார்க்கத்தின் பெயரால் வேகமாக தென்படுவார்கள். உள்ளுக்குள் மார்க்கத்தின் பெயரால் அநீதியிழைப்பவர்களாவர். அவர்களிடம் தக்வாவின் குறைபாடு உள்ளது. அவர்களிடம் இறையச்சம் தென்படுவதில்லை. அவர்களுக்கு மறுமையை விட உலகப் பயன்கள் கண்ணியத்திற்குரியவை. பெயரோ இறைவன் மற்றும் மறுமை என்று கூறுகின்றனர்.

ஆகவே இந்ந விஷயங்களின் உயிர்அவசியமாகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அதனையே உருவாக்க விரும்பினார்கள். வெறும் பேச்சு மட்டும் கூடாது. ஆன்மா இருக்க வேண்டும். இந்த விஷயங்களை நாம் கண் முன் நிறுத்தியவாறு நம்மை நாமே ஆய்வு செய்ய வேண்டும். நாம் இந்த எண்ணத்தில் மாநாட்டில் பங்கு கொள்கிறோமா? நமக்குள் இவற்றைப்

பெறுவதற்காக துடிப்பு உள்ளதா? மனித பலவீனத்தின் காரணமாக, கடந்த காலத்தில் இவற்றைப் பெறுவதில் நம்மிடம் தவறுகள் ஏற்பட்டிருந்தால் நாம் வருங்காலத்தில் புதிய உறுதியுடன் அந்த நன்மைகளை உருவாக்கவும், அவற்றை நிலைநாட்டவும் முடிந்தவரை முயற்சி செய்வோம் எனில், இன்று நாம் உலகத்தை விட அதிகமாக மறுமை பற்றி சிந்திப்போம் என்று உறுதி எடுக்கிறோம் எனில் நாம் இறையச்சம் மற்றும் பயம் அவனது நேசம் ஆகியவற்றிற்கு எல்லாவற்றையும் விட முன்னுரிமை தருகிறோம் எனில் நாம் தக்வாவின் நுட்பமான வழிகளில் செல்ல முடிந்தவரை முயற்சி செய்வோம் எனில் நாம் நமது உள்ளத்தில் மற்றவருக்காக மென்மையை உருவாக்குவோம் எனில் நாம் ஒருவருக்கொருவர் அன்பு சகோதரத்துவம் ஆகியவற்றை அதிகப்படுத்தி அந்த அன்பு சகோதரத்துவம் ஒரு முன்மாதிரியாக இருக்கும் எனில் பணிவு மற்றும் விருந்தோம்பலில் முன்னேறுபவர் ஆகி விட்டோம் எனில் உண்மை மற்றும் நேர்மையான பேச்சு நமது சிறப்புப் பண்பாக ஆகி விடும் எனில் ஒவ்வொருவரும் இந்த அஹ்மதி உண்மையில் நிலை நிற்கிறார்.

உண்மை பேசுகிறார். அதற்காக எந்த நஷ்டத்தையும் சகித்துக் கொள்கிறார் என்று கூறுகிறார்கள் எனில் மார்க்கப் பணிக்காக அவரது வேகம் ஒரு முன்மாதிரியாக இருக்கும் எனில் அதற்காக முன்னரை விட அதிகமாக தமது சுற்றுப்புறத்தில் உள்ள ஒவ்வொரு வருடமும் கொண்டு சேர்க்கவும் முயற்சி செய்வர். அவர்களுக்கு உண்மையான இஸ்லாம் என்னவென்று அவர் கூறுவார்.

நாம் இந்த உறுதிமொழியை நிறைவேற்றினோம் எனில் நமது வாழ்வை அதற்கேற்ப ஆக்கிக் கொண்டோம் எனில் பிறகு நிச்சயமாக நாம் பைஅத் உடன்படிக்கையை நிறைவேற்றி விட்டோம். வாருங்கள். நாம் இந்த விஷயங்களைப் பெறுவதற்காக இவற்றை நமது செயல் ஏடாக ஆக்குவோம். மறுமையின் கவலையும் அல்லாஹ்வின் பயமும் கொண்டவராக ஆகுவோம். இத்தகையவர் தமது வணக்க வழிபாடுகளில் கவனம் செலுத்துவார். ஒருபுறம் அவர், இறைவன் நமது வாழ்வின் நோக்கமாக எதனை ஆக்கியுள்ளான் என்று பார்க்கிறார்.

அவன் கூறுகிறான்: وَمَا خَلَقْتُ الْجِنَّ وَالْاِنْسَ اِلَّا لِيَعْبُدُوْنِ (51:57)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இந்த வசனத்தின் பொருளை இவ்வாறு கூறுகிறார்கள். நிச்சயமாக நான் மனிதனையும் ஜின்னையும் படைத்து அவர்கள் என்னை கண்டறிவதற்காகவும் என்னை வணங்குவதற்காகவுமேயாகும். ஆகவே இந்த வசனத்தின்படி மனிதனது நோக்கம் இறைவனை வணங்குவதும் இறைஞானம் பெறுதல் இறைவனுக்காக ஆகி விடுதல் ஆகும்.

அவர்கள் கூறுகிறார்கள்: மனிதனுக்கு இந்த உயர் தகுதி கிடைக்கவில்லை என்பது வெளிப்படை. தனது வாழ்வின் நோக்கத்தை தானே உருவாக்க வேண்டும் என்று நினைக்கிறான். இது தவறு. காரணம் மனிதன் தான் விரும்பி இவ்வுலகில் வரவும் இல்லை. விரும்பியபோது போவதும் இல்லை. மாறாக அவன் ஒரு படைக்கப்பட்ட பொருள் ஆவான். அவனைப் படைத்தவன் எல்லா விலங்குகளை விட மேலாக இவனை உருவாக்கியுள்ளான். அவனே இவனது வாழ்விற்கு ஒரு நோக்கத்தை ஏற்படுத்தியுள்ளான். மனிதன் அந்த நோக்கத்தைப் புரிந்தாலும் சரி, புரியாவிட்டாலும் சரி. மனிதனின் பிறப்பின் நோக்கம் சந்தேகமின்றி இறைவனை வணங்குவதல், இறைவனது ஞானம், இறைவனிடம் மாய்ந்து விடுதல் ஆகும்.

(இஸ்லாமி உஸூல் கி ஃபிலாஸஃபி, ரூஹானீ கஸாயின் தொகுதி 10 பக்கம் 414)

இந்த நோக்கத்தை நிறைவேற்றவே அல்லாஹ் நமக்கு வணக்க வழிபாடுகளை செய்யும் முறையைக் கற்றுத் தந்துள்ளான். அது என்ன? அது தொழுகையை நிலைநாட்டுதல் ஆகும்.

அல்லாஹ் கூறுகிறான்: اِنَّ الصَّلٰوةَ كَانَتْ عَلَى الْمُؤْمِنِيْنَ كِتٰبًا مَّوْقُوْتًا அதாவது நிச்சயமாக தொழுகை நம்பிக்கை கொண்டவர்களுக்கு நேரம் வரையறுக்கப்பட்ட கடமையாகும். (4:104)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: நான் நேரம் வரையறுக்கப்பட்ட தொழுகை குறித்து மிகவும் கண்ணியம் வழங்குகின்றேன். (மல்ஃபூஸாத் தொகுதி 3 பக்கம் 63)

இந்த விஷயம் எனக்கு மிகவும் பிரியமானதாகும்; நேசமிக்கதாகும். குறித்த நேரத்தில் நிறைவேற்றுவது மிகவும் அவசியமானதாகும். ஆனால் நாம் இக்காலத்தில் பார்க்கிறோம். சிறு சிறு விஷயத்திற்கெல்லாம் நேரத்தில் தொழுவதை பெரும்பாலார் அலட்சியம் செய்கின்றனர். குறிப்பிட்ட நேரம் ஒருபுறம் இருக்கட்டும். சிலர் தொழுவதே இல்லை. ஐந்திற்குப் பதில் மூன்று நான்கு தொழுகிறார்கள். சோம்பல் காட்டுகின்றனர். ஆனால் அல்லாஹ் நம்பிக்கை கொண்டவர்களுக்கு தொழுகையைப் பாதுகாக்குமாறு கூறுகிறான்.

அல்லாஹ் கூறுகிறான்: حٰفِظُوْا عَلَى الصَّلَوٰتِ وَالصَّلٰوةِ الْوُسْطٰى தொழுகைகளையும் நடுத் தொழுகைகளையும் பேணுங்கள். (2:239) ஆனால் நம்மில் சிலர் தொழில்கள், பணிகளின் காரணத்தால் ளுஹர் அஸர் தொழுகைகளை வீணாக்கி விடுகின்றனர். டி.வி நிகழ்ச்சிகள் அல்லது மாலையில் தமது சொந்த நிகழ்ச்சிகளின் காரணமாக மக்ரிப் இஷா தொழுகைகளை வீணாக்கி விடுகின்றனர். தூக்கத்தை காரணம் காட்டி ஃபஜ்ர் தொழுகையை வீணாக்கி விடுகின்றனர். ஆகவே நாம் அல்லாஹ்வின் கட்டளையின்படி செயல்படுகிறோமா இல்லையா? என்று ஒவ்வொருவரும் தம்மை ஆய்வு செய்ய வேண்டும்.

ஜமாஅத்தின் குறிப்பான நிகழ்ச்சிகள் மற்றும் ரமலான் மாதத்தில் ஜமாஅத்துடன் தொழுது விட்டு அல்லாஹ்வின் கட்டளையின்படி செயல்பட்டு விட்டதாகக் கருதுகின்றனர். மற்ற நாட்களில் நாம் எப்படியோ அமல் செய்தாலும் செய்யாவிட்டாலும் சரி, எதுவும் ஆகாது என்று நினைக்கின்றனர். ஆனால் கேளுங்கள். இதனை கவனியுங்கள். தொழுகையின் முக்கியத்துவத்தை விளக்கியவாறு அல்லாஹ் மற்றும் அவனது ரஸூல் என்ன கூறுகிறார்கள்?

அல்லாஹ் கூறுகிறான்: اِنَّمَا يَعْمُرُ مَسٰجِدَ اللّٰهِ مَنْ اٰمَنَ بِاللّٰهِ وَالْيَوْمِ الْاٰخِرِ

அதாவது அல்லாஹ்வின் பள்ளியை நிரப்புபவர்கள் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்பவர்களும் மறுமை நாளின் மீது நம்பிக்கை கொள்பவர்களும் ஆவர். (9:20)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்: ஒருவரை பள்ளிக்கு வந்து தொழுது விட்டுச் செல்பவராகக் கண்டால் அவர் நம்பிக்கை கொண்டவர் என்பதற்கு சாட்சி கூறுங்கள். காரணம் அல்லாஹ் கூறுகிறான். அல்லாஹ் உடைய பள்ளியை நிரப்புபவர்கள் அல்லாஹ் மற்றும் மறுமை நாள் மீது நம்பிக்கை கொள்பவர் ஆவர்.

(சுனன் இப்னு மாஜா, கிதாபுல் மஸாஜிது வல் ஜமாஅத்.... ஹதீஸ் எண் 802)

சொல்வதென்றால், அனைவரும் தம்மை நம்பிக்கை கொண்டவர்கள் என்று கூறுவர். ஆனால் அல்லாஹ் மற்றும் அவனது ரஸூலின் பார்வையில் நம்பிக்கை கொண்டவர் என்பவர்


O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230

O.A.N. DOORS & STEELS



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram, (opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

அல்லாஹ்வின் வீட்டை நிரப்புபவர் ஆவர். காரணம் அவருக்கு அல்லாஹ்வின் மீதும் மறுமை நாளின் மீதும் நம்பிக்கை இருக்கிறது. இதில் ஒரு விஷயம் தெளிவாகி விட்டது. பள்ளிக்கு வருவது மட்டும் போதுமானதல்ல. மாறாக அல்லாஹ் மற்றும் மறுமை நாளின் மீது நம்பிக்கை கொண்டதன் உணர்வு வர வேண்டும். இந்த உணர்வு கொண்டவரிடம் அல்லாஹ்வின் பயம் இருக்கும். அவர் பள்ளியில் வந்து குழப்பத்தை ஏற்படுத்த மாட்டார். எவரது தொழுகை அவரது அழிவுக்குக் காரணமாக இருக்குமோ அத்தகையவருடன் இணையவுமாட்டார். அல்லாஹ்வின் திருப்திைப் பெறுவதற்குப் பதில் அத்தகைய தொழுகையாளி அல்லாஹ்வின் கோபத்தின் முகத்தைப் பெறுவாரா? இல்லை.

அத்தகையோர் உண்மையான தக்வா உள்ளவராக இருப்பர். மறுமை நாள் குறித்து சிந்திப்பவராக இருப்பர். அவர்களின் உள்ளம் மென்மையாக இருக்கும். அவர்களிடம் அன்பு, நேசம், சகோதரத்துவம் இருக்கும். அவர்களிடம் பணிவு காணப்படும். அவர்கள் உண்மையின் மீது நிலைத்து நிற்பர். அவர்கள் இஸ்லாத்தின் அமைதி நிறைந்த போதனையைத் தப்லீக் செய்வர். அவர்களின் பள்ளிகள் பயப்படத்தக்கதாக இருப்பதில்லை. குடும்பத்தின் இடமாகவும் இருப்பதில்லை.

எனவே அல்லாஹ் கூறுகிறான்: நீங்கள் எத்தகைய பள்ளியில் தொழ நிற்க வேண்டும் என்றால் அதன் அடிப்படை தக்வாவைக் கொண்டதாக இருக்க வேண்டும். அது குழப்பம் கிளர்ச்சியின் நோக்கத்தில் கட்டப்பட்டதாக இருக்கக் கூடாது. எனவே தக்வாவில் நிலைத்து நின்றவாறு மஸ்ஜிதுகளை நிரப்புகின்றனர். அவர்கள் அல்லாஹ்வின் உரிமையையும் நிறைவேற்றுகின்றனர். அத்தகைய மக்களுக்கு நற்செய்தி கூறியவாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்:

கியாமத் நாளில் அல்லாஹ் முதலாவதாக மனிதனைப் பற்றி மலக்குகளிடம் சொல்வான். நீங்கள் அவனது தொழுகைகளைப் பாருங்கள். முதலில் அடியான் தொழுகிறானா? இல்லையா? என்று பாருங்கள். அவர்களின் தொழுகை முழுமையாக இருந்தால்அவரது பெயரில் தொழுகை முழுமையானதாக எழுதப்படும்.

மேலும் இவ்வாறு வருகிறது: தொழுகையில் குறைவு இருந்தால் கடமையான தொழுகையில் குறைவு இருந்தால் அவரைப் பற்றிக் கூறப்படும். அவரது உபரி வணக்கங்களைப் பாருங்கள். பர்ளில் ஏதாவது குறைவு இருந்தால் அதனை நஃபில் மூலம் முழுமை செய்யுங்கள்.

(சுனன் அபூதாவூது, கிதாபுஸ் ஸலாத்..... ஹதீஸ் எண் **864**)

ஆகவே அல்லாஹ் இங்கு கூறுகிறான்: எனது அடியான் முயற்சி செய்து தனது அடிமைத் தன்மையைக் காட்டுபவனாவான். அவனது வணக்கத்தின் உரிமையை நிறைவேற்றுபவன் ஆவான். பிறகும் கூட மனித பலவீனத்தால் பலவீனம் ஏற்பட்டு விட்டால் சில நேரங்களில் அதனை மன்னிக்கவும், அடியானின் நற்செயலின் எடையை அதிகமாக்குவதற்காகவும் தனது ரஹ்மத்தின் நடைமுறையைக் காட்டியவாறு அல்லாஹ் அவனது நஃபில்களைப் பர்ள்களின் மீது போட்டு பர்ள்களை முழுமை செய்து விடுகிறான்.

இங்கு பாருங்கள். நஃபில் தொழுபவர்கள் குறிப்பாக இறைவன் மீது பயம் உள்ளவர்களாக இருப்பர். நஃபில் என்பது வெளியில் வந்து தொழுவதற்குப் பெயரல்ல. அது மறைமுகமாக தொழப்படுகிறது. தனியாகத் தொழப்படுகிறது. பிறகு அல்லாஹ்வின் பயமுள்ளவரே அவ்வாறு செய்வார். அவரையே அல்லாஹ் எனது அடியார் என்று கூறியுள்ளான். அந்த அடியார்களிடம் தவறு ஏற்படுகிறது. ஆனால் அந்தத் தவறும் நிரந்தரமாக தொடர்வதில்லை. அந்தத் தவறுகளை களைய முயற்சி செய்கிறார்கள். இதுவே அல்லாஹ்வின் ரஹ்மத்தான நடைமுறையாகும். ஒருபுறம் தொழுகை சாதாரண விஷயமல்ல என்று கூறி விட்டான். அது குறித்தே முதலில் விவரிக்கப்படும்.

எனவே அதனை நிறைவேற்றுவதில் கவனம் செலுத்துங்கள். அத்துடன் கூறினான்: நீங்கள் தக்வாவின் படி நடந்தவாறும் அடிமைத்தனத்தின் இபாதத்தின் உரிமையை நிறைவேற்றவும் முயன்றால் பிறகு உபரி வணக்கங்களையும் செய்வீர்கள். அதன் கூலி கடமையானதற்கு சமமாக ஆகி விடுகிறது. பிறகு நான் உங்களை மன்னிப்பின் போர்வையில் எடுத்துக் கொள்வேன். எங்கு நற்செய்தி இருக்கிறதோ, மன்னிப்பின் நம்பிக்கை ஊட்டப்பட்டுள்ளதோ அங்கு அல்லாஹ் உபரி வணக்கத்தின் பக்கமும் கவனமூட்டியுள்ளான்.

எனவே நம்பிக்கை கொண்டவர் என்பவர் அல்லாஹ்வின் பயத்தை உள்ளத்தில் கொண்டவாறு அவனது அருள்களை ஈர்ப்பதற்காக தமது பர்ள்களின் பக்கம் கவனம் செலுத்துகிற வேளையில் உபரி வணக்கங்களின் மீதும் கவனம் செலுத்த வேண்டும். அதன் மூலம் அவரது ஃபர்ளின் குறைகள் நிறைவேறுகின்றன. இவர்களே உண்மையில் அல்லாஹ்வின் பயம் கொண்டவர்கள் ஆவர். தக்வாவின்படி நடப்பவர்கள் ஆவர்.

இந்தத் தக்வாவின் காரணத்தால்தான் மற்ற நன்மைகள் செய்வதின் பக்கமும் கவனம் ஏற்படுகிறது. அவர்களின் உள்ளம் ஒருவர் மற்றவர் மீது மென்மையாகிறது. ஒருவர் மற்றவரிடம் பதிலடி கொடுப்பதற்குப் பதில் ஒருவர் மற்றவர் பற்றி மன்னிப்பின் மீது கவனம் செலுத்துகிறார். அல்லாஹ்வின் நேசத்தைப் பெறுவதற்காக ஒருவருக்கொருவர் அன்பு, நேசத்துடன் நடந்து கொள்கின்றனர். அவர்களின் உள்ளத்தில் பணிவு ஏற்படுகிறது. ஒருவர் மற்றவருக்காக தியாகத்தின் ரூஹை உருவாக்குகின்றனர். இதன் அடிப்படையில் ஒவ்வொருவரும் தம்மை ஆய்வு செய்வது அவசியமாகும். நம்மிடம் இந்த விஷயங்கள் இருக்கின்றனவா?

ஓர் உண்மையான வணக்கம் செய்பவர் ஒவ்வொரு நன்மையையும் கடைபிடிக்க முயற்சி செய்கிறார். ஒருவருக்குத் தமது சகோதரர் மீது அன்பின் உணர்வு இல்லை எனில் அவரிடம் உண்மையான தக்வா இல்லை. எவரிடம் மென்மையான உள்ளம் இல்லையோ அவரும் கவலைப்பட வேண்டும். எவரது வீட்டில் அவரது மனைவி மக்கள் அவரால் நெருக்கடிக்கு உள்ளாகிறார்களோ அவரும் தக்வாவிலிருந்து வெறுமையாக உள்ளார். மனைவி தமது கணவர், பிள்ளைகளின் உரிமைகளைத் தரவில்லை எனில் அனுமதிக்கப்படாத வேண்டுதல்களை வைக்கிறார் எனில் அவரது உள்ளமும் தக்வாவிலிருந்து வெறுமையாக உள்ளது. எனவே ஒருவருக்கொருவர் உள்ள தொடர்பில் மென்மை ஏற்படுத்துபவரே உண்மையான தக்வாவில் நிலைநிற்பவர் ஆவார்.

## திருக்குர்ஆனிலிருந்து...

எல்லா உயிர்களும் மரணத்தைச் சுவைத்தே தீரும். உங்களுக்கு உங்க(ளின் செயல்க)ளின் முழுமையான கூலி இறுதி நாளில் (தான்) கிடைக்கும். எனவே நெருப்பிலிருந்து அகற்றப்பட்டு, சொர்க்கத்தில் நுழைக்கப்பட்டவன் வெற்றி பெற்றான். இவ்வுலக வாழ்க்கை ஏமாற்றக்கூடிய, தற்காலிகப் பொருள்கள் அல்லாமல் வேறில்லை. **(3:186)**

A.Nasir Ahmad (அமீர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், மேலப்பாளையம்)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: கியாமத் நாளில் அல்லாஹ் கூறுவான். எனது கம்பீரம் மற்றும் மகத்துவத்திற்காக ஒருவர் மற்றவர் மீது நேசம் கொண்டார்களோ அவர்கள் எங்கே? இன்று எனது நிழலைத் தவிர வேறு நிழல் இல்லை. கியாமத் நாளில் வேறு நிழல் இல்லை. இன்று நான் எனது ரஹ்மத்தின் நிழலில் அவருக்கு இடம் தருவேன்.

(சஹீஹ் முஸ்லிம் கிதாபுல் பிர்... ஹதீஸ் எண் 2566)

ஆகவே அல்லாஹ்வுக்காகத் தனது கட்டளைகளை அமல் செய்வதற்காக ஒருவர் மற்றவர் மீது அன்பு நேச உணர்வு கொள்கிறார் எனில் அவரே அல்லாஹ்வின் அன்பை ஈர்ப்பவர் ஆவார். இன்னொரு வார்த்தையில் கூறுவதாயின் எவர் இதனை ச்செய்வதில்லையோ அவர் அல்லாஹ்வின் கோபத்திற்குக் காரணமாக அமைவார். இந்த உயிரை நாம் நம்மிடம் உருவாக்க வேண்டிய தேவை உள்ளது. நாம், எல்லாரிடத்தும் அன்பு, எவரிடத்தும் இல்லை வெறுப்பு என்று முழக்கமிடுகிறோம் எனில் முதலில் அதனை தமது வீட்டிலும் சமூகத்திலும் வெளிப்படுத்துவது அவசியமாகும். அதன் மூலம் நாம் உண்மையான முறையில் அந்த தூதுச் செய்தியைக் கொண்டு சேர்க்க வேண்டும். பிறகு ஒரு பணி என்னவெனில் சிறிது முயற்சி செய்தால் எந்தவொரு பெரிய முயற்சியும் இல்லாமலேயே அல்லாஹ்வின் ரஹ்மத்தின் நிழலில் வந்து விடலாம்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் சமுதாயத்தின் அமைதி நிம்மதியை நிலைநாட்டுவதற்கும், அன்பு நேசத்தை அதிகமாக்குவதற்காகவும் போதனை செய்துள்ளார்கள். அது குறித்து கூறுகிறார்கள்: முஸ்லிம்கள் முஸ்லிம்களின் சகோதரர் ஆவர். அவர்கள் தமக்குள் அநீதியிழைக்க மாட்டார்கள். தனியாக விடவும் மாட்டார்கள். ஒருவர் தமது சகோதரரின் விருப்பத்தை நிறைவேற்றினால் அல்லாஹ் அவரது விருப்பத்தை நிறைவேற்றுகிறார். ஒரு முஸ்லிமின் கஷ்டங்களை அகற்றியவருக்கு அல்லாஹ் கியாமத் நாளில் அவரது கஷ்டங்களைக் குறைக்கிறார். ஒருவர், ஒருவரது குறையை மறைத்தால் அல்லாஹ் கியாமத் நாளில் அவரது குறையை மறைப்பான்.

(சஹீஹுல் புகாரி கிதாபுல் முஸாலிம்.... ஹதீஸ் எண் 2442)

ஆகவே அல்லாஹ் பல்வேறு வழியில் நம்மீது நம்மீது ரஹ்மத் மற்றும் பரிவின் பார்வையை செலுத்துகிறான். நமது மன்னிப்புக்கான ஏற்பாடு செய்கிறான். அதே மனிதன்தான் தனது தகுதியற்ற ஆணவம் மற்றும் பிடிவாதத்தால் அல்லாஹ்வின் கோபத்தை ஏற்படுத்துகிறான்.

எனவே இந்த மாநாட்டில் கலந்து கொள்ள வேண்டும் என்றும் நல்ல விஷயங்களைக் கேட்க வேண்டும் என்றும் வந்துள்ளோம். எனவே நாம் சிந்திக்க வேண்டிய இடமாகும். நாம் நமது உணர்வுகளை நன்மையின் பக்கம் குவித்தவாறு வந்துள்ளோமா என்று கவலை கொள்ளும் இடமாகும். இந்நிலையில் நம்மை ஆய்வு செய்ய வேண்டும். நம்மைப் புரிந்து கொள்ள முயற்சி செய்ய வேண்டும். நமது அடியார்களின் உரிமையை நிறைவேற்றவும் முயல வேண்டும். மென்மையான உள்ளம் ஒருவருக்கொருவர் அன்பு, பணிவின் உண்மையை அறிய முயலுதல் தேவையாகும். இதனைச் செய்ய வேண்டிய அவசியம் ஏன் எனில், நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் பைஅத்தில் இணைந்துள்ளோம் என்பதற்காகவும் நம்மைப் புரிந்து கொள்ள முயற்சி செய்ய வேண்டும். இணைவைப்பிலிருந்து விலகுவதாகவும் தொழுகையை நிறைவேற்றுவதற்காகவும் ஃபர்ளுடன் நஃபில் தொழுவதாகவும் பொதுவாக அல்லாஹ்வின் படைப்பினங்களுடன் குறிப்பாக முஸ்லிம்களுடன் எமது மன எழுச்சியினால் எந்தத் தொல்லையும் தரமாட்டோம் என்றும் உறுதி கொண்டுள்ளோம். ஒருவருக்கொருவர் முஸ்லிம்களுக்காக என்றல்ல.

ஜமாஅத் உறுப்பினர்களுக்குள் என்று கூட இல்லை. சரி தமது வீட்டில் ஆரம்பித்து ஒருவருக்கொருவர் தமக்காகவும் முஸ்லிம்களுக்காகவும் பொதுவாக படைப்பினங்களுக்காகவும் எல்லாரின் மீதும் நமது உள்ளத்தில் நேச உணர்வு ஏற்பட வேண்டும். மன எழுச்சியிலிருந்து விடுபட வேண்டும். தமது கீழுள்ளவர்களிடம் நன்னடத்தையைக் காட்ட வேண்டும். ஒவ்வொருவரும் தமது நன்மைகளைக் குறித்துப் பார்க்க முடிய வேண்டும். பின்பற்ற முயல வேண்டும். இவ்வாறு இதற்கேற்ப நாம் அமல் செய்கிறோமா? இந்த தகுதி இருந்தால் மற்றவர்கள் பார்க்க முடிந்தால் பின்பற்ற முடிந்தால் அப்போதுதான் நாம் உண்மையான மூஃமின் ஆவோம். அதன் உரிமையை நிறைவேற்றுபவர்கள் ஆவோம். ஒரு நிபந்தனை என்னவெனில், நாம் பைஅத் செய்கிறோம் எனில் கர்வத்தை முற்றிலும் விட்டு விலகி எளிமை, பணிவுள்ள வாழ்க்கையை வாழ வேண்டும். (இஸாலா அவ்ஹாம், ரூஹானீ கஸாயின் தொகுதி 3 பக்கம் 564)

இந்தப் பணிவு எளிமையை உருவாக்குவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஜல்ஸாவின் நோக்கங்களுள் ஒரு நோக்கமாகக் குறிப்பிடவில்லை. மாறாக நம்மிடம் வாங்கிய பைஅத் உடன்படிக்கையில் ஒன்றாகக் கூறியுள்ளார்கள். நான் எளிமையாகப் பணிவுடன் வாழ்க்கை நடத்துவேன் என்ற வாக்குறுதியை வாங்கியுள்ளார்கள்.

ஆகவே இந்த உடன்படிக்கையை நிறைவேற்றுவது நமது கடமையாகும். இதுவே உண்மையின் பக்கம் முதல் அடியாகும். நாம் செய்த பைஅத் உடன்படிக்கையை நிறைவேற்றுங்கள். ஆகவே பைஅத்தின் உடன்படிக்கையைப் படித்து வர வேண்டும். பாருங்கள். நாம் உண்மையான முறையில் அதில் நிற்கிறோமா அதற்கேற்ப நாம் வாழ்வைக் கழிக்க முயல்கிறோமா? இல்லையெனில் நாம் உலகத்தை சீர்திருத்துவதாக வாதம் செய்கிறோமே அது தவறாகும். முதலில் நாம் நம்மை சீர்திருத்த வேண்டியது தேவையாக உள்ளது. அதுவன்றி நாம் சொல்வது ஒன்று, செய்வது ஒன்று என்று வாழ்பவர்களில் ஒருவர் ஆவோம். அல்லாஹ் அத்தகையவர்களை விரும்பவில்லை. நமது அமல் நமது உண்மைக்குப் பதில் நமது பொய்யைத்தான் நிரூபித்துக் காட்டும்.

இவ்வாறு சொல்லுக்கும் செயலுக்கும் வித்தியாசம் இருந்தால் பிறகு மார்க்க சேவை செய்வதாக வாதம் செய்வது அதற்காக வேகம் கொள்ளுதல் ஆகிய வெளிப்பாடுகள் தவறானதாக ஆகிவிடும். நிச்சயமாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் உண்மையாளர் ஆவார்கள். அவர்களது வாதம் உண்மையானது. நிச்சயமாக அல்லாஹ் அவர்களிடம் வெற்றிக்கான வாக்குறுதி தந்துள்ளான். நிச்சயமாக அல்லாஹ் அன்னாருக்கு கலப்பற்றவர்களைக் கொண்ட ஒரு ஜமாஅத்தை தருவதாக வாக்களித்துள்ளான். ஆனால் நமது நிலை அவ்வாறு இல்லை

## திருக்குர்ஆனிலிருந்து...

தாங்கள் செய்பவற்றைப் பற்றிப் பெருமை கொண்டு, தாங்கள் செய்யாதவற்றிற்கும் பாராட்டப்பட வேண்டுமென்று விரும்புகின்றவர்கள், தண்டனையிலிருந்து பாதுகாக்கப்படுவர் என நீர் ஒருபோதும் நினைக்க வேண்டாம். அவர்களுக்கு வேதனையளிக்கக்கூடிய தண்டனை (விதிக்கப்பட்டு) உள்ளது. (3:189)

M.Sabahul Islam & Mohaideen Ali, Melapalayam

என்றால் அதில் இணையமாட்டோம். அன்னாருடைய இயக்கத்திற்கு உதவி செய்பவர்களில் சேர மாட்டோம். ஆகவே அந்த வாக்குறுதியின் பரக்கத்துகளைப் பெறுவதற்கு நமது நிலைமைகளை ஆய்வு செய்வது அவசியமாகும். அன்னார் ஜல்ஸாவின் நோக்கங்களை கூறியுள்ளார்கள். அதில் கவனம் செலுத்துவது அவசியமாகும். நற்பேற்றால் ஜல்ஸாவின் மூன்று நாட்கள் நம்மை ஆய்வு செய்வதற்கே வருகின்றன. இந்நாட்களில் ஒவ்வொருவரும் தம்மை ஆய்வு செய்ய வேண்டும். அங்கிங்கு பேசிக் கொண்டிருப்பதை விட்டு விட்டு துஆ, இஸ்திக்ஃபார், தரூது இவற்றில் கவனம் செலுத்த வேண்டும். அப்போதுதான் நாம் ஜல்ஸாவிலிருந்து உண்மையான பயன் பெறுவர் ஆவோம்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: எனது ஜமாஅத்தின் எல்லாரும் இந்தப் போதனையைக் கவனத்துடன் கேளுங்கள். அவர்கள் இந்த இயக்கத்தில் நுழைந்து என்னுடன் தொடர்பு கொண்டிருப்பவர்களின் நோக்கம் நல்ல நடைமுறை நல்ல செயல்முறை தக்வாவின் உயர் தகுதிகளை அடைதல் ஆகும். எந்தக் குழப்பமான விஷயமும் தீய நடைமுறையும் அவர்களிடம் வரக்கூடாது. இதுவே தக்வாவின் தரம் ஆகும். எந்த விதமான தீமைகளும் அவரிடம் இருக்கக் கூடாது.

அவர்கள் கூறினார்கள்: அவர் ஐவேளை தொழுகைகளை நிறைவேற்றியவராக இருக்க வேண்டும். அவர்கள் பொய் பேசக் கூடாது. எவருக்கும் தமது நாவால் தொல்லை தரக் கூடாது. எந்தவகை தீய செயலையும் செய்ய முயலக் கூடாது. எந்தவொரு விஷயம், அநீதி, குழப்பம், கிளர்ச்சி ஆகிய எண்ணங்கள் கூட உள்ளத்தில் வரக் கூடாது. சுருக்கமாக ஒவ்வொரு தீமைகளில், குற்றங்களில், பாவங்களிலிருந்தும், செய்யாமை, பேசாமை மற்றும் மன எழுச்சிகளிலிருந்தும் விலகியிருத்தலும் இருக்க வேண்டும். இறைவனது தூய உள்ளமும், விஷமற்ற பணிவுமிக்க அடியாராகவும் ஆக வேண்டும். நீங்கள் எப்படி ஆக வேண்டும் எனில் உங்கள் உள்ளம் தூயதாக வேண்டும்.

உங்களிடம் ஒருபோதும் விஷமம் தலைதூக்கக் கூடாது. எப்போதும் பணிவுடன் இருக்க வேண்டும். தாழ்மைக்குணம் வேண்டும். போதையும் விஷமும் ஆன எண்ணம் அவரிடம் இருக்கக் கூடாது. எல்லா மனிதரிடமும் அனுதாபம் அவரது நடைமுறையாக இருக்க வேண்டும். இறைவனுக்கு அஞ்ச வேண்டும். தமது நாவு, கை, உள்ளம் இவற்றை எல்லா அசுத்தமான கிளர்ச்சி ஏற்படுத்தும் செயல்களிலிருந்தும் நம்பிக்கை துரோகத்திலிருந்தும் விலக்க வேண்டும். ஐவேளை தொழுகையை மிகவும் கவனமாக நிறைவேற்றுங்கள். அநீதி, வரம்பு மீறல், லஞ்சம், பிறர் உரிமையைப் பறித்தல், நம்பிக்கைத் துரோகம், ஒருதலைப்பட்சம் இவற்றிலிருந்து விலகுங்கள். எந்த கெட்டவர்களுடனும் நெருங்கி இருக்காதீர்கள். கெட்ட சகவாசம் ஆகாது.

இளைஞர்கள் நினைவில் கொள்ள வேண்டும். சிறுவர்களின் பெற்றோரும் நினைவில் கொள்ள வேண்டும். நமது பிள்ளைகள் இந்த சமூகத்தில் எந்த கெட்ட நட்புடனும் அமரக் கூடாது. பிறகு அவ்வாறே ஆகி விடுவர். அந்த நட்பு எத்தகையது என்று முதலில் தெரியாமல் பிறகு அது தெரிய வந்தால் ஒருவர் ஒருவருடன் உட்காருகிறார். எழுகிறார். தொடர்பு கொண்டுள்ளார் எனில் அந்நிலையில் அவரை இறை கட்டளையைப் பேணுபவராக காணவில்லை எனில் அடியார்களின் உரிமையைப் பொருட்படுத்தாதவராகக் கண்டால் அநீதியிழைக்கக் கூடிய கெட்டவரைக் கண்டால் உங்கள் மீது கண்டிப்பான விஷயம் அந்தத் தீயவரை உங்களை விட்டு அகற்றி விட வேண்டும். நல்ல கூட்டாளி நல்ல வட்டம் இருக்க வேண்டும்.

அவர்கள் கூறுகிறார்கள்: அபத்தமானவர்களை விட்டு விலகுங்கள். எந்த ஒரு மார்க்கம், சமுதாயம் அல்லது பிரிவுக்கும் நஷ்டம் ஏற்படுத்துபவராக இருக்காதீர்கள். எவருக்கும் நஷ்டம் ஏற்படுத்தாதீர்கள். எந்த மார்க்கத்தைச் சார்ந்தவர் அல்லது சமுதாயத்தைச் சார்ந்தவருக்கும் பிரிவினராக இருக்கட்டும். நஷ்டம் ஏற்படுத்தக் கூடாது. ஒவ்வொருவருக்காகவும் நீங்கள் உண்மையான போதகராக இருங்கள். போதனை செய்தால் உண்மையான போதனை செய்பவர் போன்று இருக்க வேண்டும். உங்கள் சொல்லும் செயலும் உங்கள் போதனைக்கு ஒத்ததாக இருக்க வேண்டும். எந்த வகை ஒருதலைப்பட்சமும் இருக்கக் கூடாது.

விஷமிகள், தீயவர்கள், கிளர்ச்சியாளர்கள் தீய நடவடிக்கை உள்ளவர்கள் ஆகியவரின் சபைகளுக்கு செல்லாதீர்கள். அவர்களின் வீடுகளில் இருக்காதீர்கள். ஏதாவது ஒரு நேரத்தில் நீங்கள் தடுமாறக் காரணமாக அமையலாம். எனது ஜமாஅத்தில் ஒவ்வொருவரும் இந்த எல்லா போதனைகளையும் நடைமுறைப்படுத்துங்கள். உங்கள் சபைகளில் எந்த கெட்ட செயலும், கேலியும் நையாண்டியுமான பேச்சுக்கள் இருக்கக் கூடாது. நல்ல உள்ளம், தூய இயல்பு, தூய எண்ணத்துடன் பூமியில் வாழுங்கள். எவர் மீதும் அனுமதிக்கப்படாத முறையில் தாக்குதல் தொடுக்காதீர்கள். மன எழுச்சிகளை அடக்கி வையுங்கள். எந்த மார்க்க உரையாடலாக இருப்பினும் மென்மையான வார்த்தைகளில் கண்ணியமான முறையில் உரையாடுங்கள்.

ஒருவர் அறிவீனமான நடந்தால் சலாம் என்று கூறி அந்த சபையிலிருந்து வெளியேறுங்கள். உங்களை எல்லா உலகிற்கும் நன்மையையும் நம்பிக்கையையும் வெளிப்படுத்தும் முன்மாதிரியாக ஆக்க வேண்டும் எனறு இறைவன் விரும்புகிறான். நீங்கள் எச்சரிக்கையாக இருங்கள். தூய நல்ல உள்ளமும் எளிமையும் நம்பத்தக்கவருமாக இருங்கள். நீங்கள் ஐவேளை தொழுகை மற்றும் நல்லொழுக்கம் மூலம் அறியப்படுபவராக இருக்க வேண்டும். உங்களைக் கண்டறிய இதுவே அடையாளமாக இருக்க வேண்டும். நீங்கள் ஐவேளை தொழுபவராகவும் நல்லொழுக்கம் கொண்டவராகவும் இருக்க வேண்டும். இவை உங்களிடம் உருவானால் நீங்கள் பைஅத்தின் உரிமையை நிறைவேற்றியவர் ஆவீர்கள்.

அவர்கள் கூறினார்கள்: இதில் தீமையின் விதை இருந்தால் அவர் இந்த போதனையின்படி செயல்பட இயலாது. நான் செய்கிற இந்தப் போதனையை தீய விதையை விதைப்பவர் பின்பற்ற முடியாது.

(மஜ்மூஆ இஷ்திஹாராத் தொகுதி 3 பக்கம் 46–48, இஷ்திஹார் எண் 188)

அல்லாஹ் நம் அனைவருக்கும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய பைஅத்தை நிறைவேற்றும் வாய்ப்பு வழங்குவானாக. அவர்களின் போதனைகளையும் எதிர்பார்ப்புகளையும் நிறைவேற்றுவோமாக. ஜல்ஸாவிலிருந்து முடிந்தவரை அதிக பயன் பெற்று நம்முடைய மார்க்க ஆன்மீக அறிவு நிலைகளை சரிப்படுத்துவோமாக. அந்த நன்மைகள் நம்மிடம் நிரந்தரமாக நிலைத்திருக்கட்டுமாக.

## திருக்குர்ஆனிலிருந்து...

எங்கள் இறைவா! நீ நெருப்பில் நுழையச் செய்தவரை நிச்சயமாக இழிவுபடுத்தி விட்டாய். மேலும் அநீதி இழைப்பவர்களுக்கு உதவி செய்பவர் எவரும் இல்லை. (3:193)

Faizal Hameed Ilahi, Tittacherry

*(முதல் பக்கத்தின் தொடர்ச்சி…)*

எவ்வாறு அன்னாரின் உள்ளத்திலிருந்து வெளியேறியதோ அவ்வாறே அந்த எதிரியின் உள்ளத்தில் பதிந்து விட்டது. மேலும் இதில் மிப்பெரிய அருள்கள் இருக்கின்றன. ஆனால் எவருக்கு அல்லாஹ்வைப் பற்றிய நினைவே இருப்பதில்லையோ அவர் இதிலிருந்து எவ்வாறு பயன்பெற முடியும்?

ஆக அல்லாஹ் என்ற சொல் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நாவிலிருந்து வெளியேறியபோது அவன்மீது திகில் ஏற்பட்டு அதன் காரணத்தினால் கை நடுங்கி அந்த வாள் கீழே விழுந்தது. ஹஸ்ரத் நபிகள் நயாகம் (ஸல்) அவர்கள் அதே வாளை எடுத்து உன்னை என்னிடத்திலிருந்து இப்போது யார் காப்பாற்றுவார் என கேட்டார்கள்? அந்த பலவீனமான உள்ளம் படைத்த காட்டரபி அன்னாரின் பெயரைத்தவிர வேறு யார் பெயரைதான் கூற முடியும்?

இறுதியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தன்னுடைய நன்னடத்தையை வெளிப்படுத்தியவாறு உன்னை விட்டு விட்டேன் எனக் கூறினார்கள். மேலும் நன்மை செய்ய வேண்டும் என்ற எண்ணம் மற்றும் தைரியத்தை என்னிடத்தில் கற்றுக் கொள் என்று கூறினார்கள். இந்த நல்லொழுக்க அற்புதம் அவன்மீது எப்படிப்பட்ட தாக்கத்தை ஏற்படுத்தியது என்றால் அவன் முஸ்லிமாக மாறி விட்டான்.

சீர் என்ற புத்தகத்தில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. அபுல் ஹஸன் கர்கானீ என்ற நபரிடம் ஒருவர் வந்து இவ்வாறு கூறினார்: நான் பயணத்தில் ஒரு சிங்கத்தைக் கண்டு அதனிடம் அல்லாஹ்விற்காக என்னை பின்தொடர்வதை நீ விட்டு விடு எனக் கூறினேன். அது என்னைத் தாக்கியது. அப்போது நான் அபுல் ஹஸன் கர்கானீ என்ற அந்த நபருக்காக என்னை விட்டு விடு என கூறியதும் அந்த சிங்கம் என்னை விட்டு விலகி விட்டது. இந்த சம்பவமானது அந்த நபரின் உள்ளத்தில் ஒரு கரும்புள்ளியை ஏற்படுத்தி விட்டது. அதனால் பயணத்தை மேற்கொள்ளாமல் திரும்பி வந்து அந்த நிகழ்வை அவரிடம் கூறினார்.

அதற்கு அபுல் ஹஸன் அவர்கள் இவ்வாறு பதிலளித்தார்கள்: அல்லாஹ்வின் பெயரை நீ அறியாமல் இருந்திருந்தாய். மேலும் அல்லாஹ்வின் உண்மையான அச்சம் மற்றும் அவனுடைய மகிமை உன் உள்ளத்தில் இல்லாமல் இருந்தது. ஆனால் என்னைப் பற்றி நீ அறிந்திருந்தாய். அதனால்தான் எனக்குரிய மதிப்பும் கண்ணியமும் உன் உள்ளத்தில் இருந்தது. அல்லாஹ் என்ற வார்த்தையில் மிகப்பெரிய அருளும் சிறப்புகளும் இருக்கின்றது. ஆனால் நிபந்தனை என்னவென்றால், எவருடைய உள்ளத்தில் அல்லாஹ்விற்கு இடமளித்து மேலும் அவனுடைய சாராம்சத்தின் பக்கம் செவிசாய்ப்பார்களோ அவர்களே அதிலிருந்து பயன் பெற முடியும்.

அதேபோன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நல்லொழுக்க அற்புதங்களில் இதுவும் ஒரு அற்புதம் ஆகும். அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் ஒரு நேரத்தில் மிக அதிகமான ஆடுகள் இருந்தன. அப்போது ஒரு நபர் வந்து இவ்வாறு கூறினார்: இந்த அளவுக்கு செல்வச் செழிப்பு இதற்கு முன்னால் எவரிடமும் நான் கண்டதில்லை. அதைக் கேட்ட நபியவர்கள், அந்த அனைத்து ஆடுகளையும் அந்த நபருக்குக் கொடுத்து விட்டார்கள். அந்த நபர் அந்த தருணத்திலேயே இவ்வாறு கூறினார்: நீங்கள் உண்மை நபி என்பதில் எந்த ஒரு சந்தேகமும் இல்லை. உண்மையான நபியிடம் மட்டும்தான் இப்படிப்பட்ட வாரி வழங்கக்கூடிய அந்த வள்ளல் குணம் இருக்க முடியும். பிறரிடத்தில் இந்த செயலை காண்பது மிகவும் கடினமான ஒன்றாகும்.

ஆக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நல்லொழுக்கம் எவ்வாறு இருந்தது என்றால் அதை அல்லாஹ் திருக்குர்ஆனில் இவ்வாறு கூறியள்ளான்:

إِنَّكَ لَعَلٰى خُلُقٍ عَظِيْمٍ (68:5)

**நம்முடைய ஜமாஅத்தைச் சார்ந்தவர்களும் நல்லொழுக்கத்தில் முன்னேற்றம் அடைய வேண்டும் என்பது ஏற்புடையதாகும்**

நம்முடைய ஜமாஅத்தைச் சார்ந்தவர்களும் நல்லொழுக்கத்தில் முன்னேற்றம் அடைய வேண்டும் என்பது ஏற்புடையதாகும். ஏனென்றால் اَلْاِسْتِقَامَةُ فَوْقَ الْكَرَامَةِ – உறுதியாக நிலைநிற்றல் என்பது அற்புதங்களை விட சிறந்ததாகும் என்ற கூற்று மிகவும் பிரசித்தி பெற்றது. எவராவது உங்களிடம் கடுமையை வெளிப்படுத்தினால் நீங்கள் முடிந்தவரை பொறுமையையும் மென்மையான முறையிலும் அவர்களிடத்தில் நடந்து கொள்ளுங்கள். கடுமை மற்றும் நிர்பந்தத்தின் தேவையை பழிவாங்குதல் என்ற நிலையிலும் ஒருபோதும் நீங்கள் மேற்கொள்ளாதீர்கள்.

மனிதனின் ஆன்மா மூன்று வகைப்படும். اَمَّارَہ، لَوَّامَہ، مُطْمَئِنَّہ

اَمَّارَہ நிலையில் மனிதன் தன் உணர்ச்சிகளையும் தேவையற்ற மன உணர்வுகளையும் கட்டுப்படுத்த முடியாது. மேலும் அவனுடைய கணிப்பில் இருந்து அந்த உணர்வுகள் வெளியேறி விடுகின்றது. அதன் காரணமாக நல்லொழுக்க நிலையிலிருந்து அவன் தாழ்ந்து விடுகின்றான். ஆனால் لَوَّامَہ நிலையில் அவன் அதைக் கட்டுப்படுத்திக் கொள்கின்றான். எனக்கு ஒரு கதை நினைவுக்கு வருகின்றது. அதை சஅதி அவர்கள் புஸ்தான் என்ற புத்தகத்தில் எழுதியுள்ளார்கள்.

ஒரு முதியவரை நாய் கடித்து விடுகிறது. அதே நிலையில் அவர் வீட்டிற்கு வருகிறார். வீட்டிலுள்ள அனைவரும் நாய் கடித்த அவரைப் பாக்கின்றார்கள். அப்போது ஒரு சிறிய பெண் குழந்தை அந்த நபரைப் பார்த்து, நீங்கள் ஏன் நாயை கடிக்கவில்லை? எனக் கேட்டாள். அதற்கு அவர் என் மகளே, மனிதனிடத்தில் நாயின் தன்மை வெளிப்படகூடாது என்று கூறினார்.

அதேபோன்று ஒரு தீய மனிதன் ஏச்சு பேச்சுக்களைப் பேசினால் நம்பிக்கை கொண்ட ஒரு மூமின் கண்டிப்பாக அதிலிருந்து விலகி விட வேண்டும். அவ்வாறு செய்யவில்லை என்றால் அந்த நாய் தன்மையின் உதாரணம்தான் இங்கு பொருந்தும். இறைநேசர்கள் மிகவும் தீய ஏச்சுப் பேச்சுக்களுக்கு ஆளாக்கப்பட்டார்கள். கடும் இன்னல்களுக்கு ஆளாக்கப்பட்டடார்கள். ஆனால் அவர்களுக்கு

اَعْرِضْ عَنِ الْجٰهِلِيْنَ

அதாவது (நபியே!எப்போதும்) அறிவற்றவர்களை விட்டு முகந்திருப்புவீராக (7:200) என்ற கட்டளையே கொடுக்கப்பட்டது.

**திருக்குர்ஆனிலிருந்து…**

நம்பிக்கை கொண்டவர்களே! பொறுமையுடன் செயல்படுங்கள். (எதிரிகளை விட அதிகமாகப்) பொறுமையைக் கையாளுங்கள். எல்லைகளைக் கண்காணித்துக் கொள்ளுங்கள். நீங்கள் வெற்றி பெற இறைபக்தியைக் கைக்கொள்ளுங்கள். (3:201)

A.Shamsul Alam
காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்

சுயமே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு மிகவும் இன்னல்களும் கொடுமைகளும் கொடுக்கப்பட்டது. ஏச்சுப் பேச்சுகளாலும் தீய சொற்களாலும் வதைக்கப்பட்டார்கள். நற்பண்புகளை தன்னகத்தே கொண்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த எதிரிகளை எவ்வாறு எதிர்த்தார்கள்?

அவர்களுக்காக துஆ செய்தவாறு எதிர்ப்பை வெளிப்படுத்தினார்கள். ஏனென்றால் தீய அறிவற்றவர்களை விட்டு முகம் திருப்பினால் உம்முடைய கண்ணியம், கௌரவம் மற்றும் உயிரை நாம் பாதுகாப்போம். மேலும் இந்த வழிப்போக்கர்கள் உம்மீது தாக்குதல் தொடுக்க முடியாது எனவும் நீர் அவர்களை விட்டு விலகி இருப்பீராக என்றும் வாக்குறுதி வழங்கி விட்டான். எனவே அவ்வாறே நடந்தது எதிரிகளால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கண்ணியத்திற்கும் கௌரவத்திற்கும் எந்த ஒரு களங்கத்தையும் ஏற்படுத்த முடியவில்லை.

மாறாக, அவர்கள் சுயமே இழிவடைந்தவாறு சிலர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பாதங்களில் வந்து விழுந்தார்கள். சிலர் அவர்களின் கண் எதிரே அழிந்து போனார்கள். இதுவே லவ்வாமாவின் நிலையாகும். மனிதன் தடுமாற்றத்திலிருந்து தன்னை சீர்திருத்திக் கொள்கின்றான். அன்றாட நாட்களில் நடக்கக்கூடிய விஷயமானது, ஏதாவது ஒரு அறிவிலி மற்றும் முட்டாள் ஏசிப் பேசினாலோ அல்லது தீங்கு விளைவித்தாலோ அவனிடமிருந்து நாம் எந்த அளவுக்கு விலகி இருப்போமோ அந்த அளவுக்கு நாம் நமது கண்ணியத்தைப் பாதுகாத்துக் கொள்ளலாம். மாறாக, அவனுக்கு ஈடாக நாம் அவனை எதிர்த்தால் நாம் அழிந்து விடுவோம். மேலும் நாமே இழிவை சென்று தேடி பெற்றதுபோல் ஆகிவிடும்.

நஃப்ஸே مُطْمَئِنَّه நிலையில் மனிதனின் ஆளுமை உன்னதமானதாகவும், நன்மையாகவும் ஆகி விடுகின்றது. அவன் அல்லாஹ்வைத் தவிர்த்து உலகைவிட்டு முற்றிலுமாக தன்னைத் துண்டித்து விடுகின்றான். அவன் உலகம் மற்றும் உலகவாதிகளுடன் தொடர்பை ஏற்படுத்துகின்றான்; மேலும் அவர்களை சந்திக்கின்றான்; அவர்களுடன் பேசுகின்றான்; அவ்வாறிருந்தும்கூட உண்மையில் அவன் இவ்வுலகில் இருப்பதில்லை. அவன் எங்கே இருக்கின்றானோ அந்த உலகம் தனித்தன்மை கொண்ட ஒன்றாக மாறி விடுகின்றது. அந்த உலகத்தின் வானம் மற்றும் பூமி வேறு ஒன்றாக இருக்கின்றது.

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்திற்கான நற்செய்தி**

அல்லாஹ் திருக்குர்ஆனில் இவ்வாறு கூறுகின்றான்:

وَجَاعِلُ الَّذِيْنَ اتَّبَعُوْكَ فَوْقَ الَّذِيْنَ كَفَرُوْٓا اِلٰى يَوْمِ الْقِيٰمَةِ

ஈஸாவே! நான் உம்மைப் பின்பற்றுபவர்களை நிராகரிப்பவர்களைவிட இறுதிநாள் வரை மேலோங்கச் செய்வோம். (3:56)

இந்த ஆறுதல் அளிக்கக்கூடிய வாக்குறுதி நாசரேத்தில் பிறந்த இப்னும் மர்யமிற்கு வழங்கப்பட்டதாகும். ஆனால் யஸூ மஸீஹ் அவர்களின் பெயரில் வரவிருக்கின்ற இப்னு மர்யமையும் எல்லாம் வல்ல இல்லாஹ் இந்த வார்த்தைகளைக் கொண்டே அழைத்து நற்செய்தி வழங்கியுள்ளான் என்ற நற்செய்தியை நான் உங்களுக்கு கூறுகின்றேன். தற்போது நீங்கள் சிந்தித்துப் பாருங்கள். என்னுடன் தொடர்பை வைத்துக் கொண்டு இந்த மகத்தான வாக்குறுதி மற்றும் நற்செய்தியுடன் இணைத்துக் கொள்ள விரும்புபவர்கள் அம்மாராவின் நிலையில் பாவங்கள் மற்றும் குற்றங்களில் பிணைத்துக் கொண்டவர்கள்போல் இவர்களும் பிரிந்து செல்ல விரும்புவார்களா?

ஒருபோதும் இல்லை. எவர்கள் அல்லாஹ்வின் இந்த வாக்குறுதிக்கு உண்மையான மதிப்பளிப்பார்களோ மேலும் என்னுடைய கூற்றை கட்டுக்கதை என்று கருத மாட்டார்களோ அவர்கள் நினைவில் வைத்துக் கொள்ளு'கள். மேலும் உள்ளத்திலிருந்து இதைக் கேளுங்கள். நான் மீண்டும் ஒருமுறை என்னுடன் தொடர்புடைய அந்த மக்களை நோக்கி இவ்வாறு கூறுகின்றேன். என்னுடன் வைத்திருக்கின்ற தொடர்பு சாதாரண தொடர்பு அல்ல. மாறாக, மிகவும் வலிமை வாய்ந்ததாகும். அந்த தொடர்பின் தாக்கம் என் வரை சென்றடைவதில்லை.

மாறாக, உலகில் உண்மை மற்றும் சத்தியத்தின் ஆன்மாவை கொண்டு வந்த இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட அந்த உண்மையான மனிதர் (ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்) வரை சென்றடையக்கூடிய ஒரு தொடர்பாக இருக்கின்றது. இந்த விஷயங்களின் தாக்கம் என் வரை சென்றடைகிறது என்றால் எனக்கு அதைப்பற்றி எந்த ஒரு கவலையும் அச்சயமும் ஏற்பட்டிருக்காது. மேலும் நான் அதைப்பற்றி சிந்திக்கவும் இல்லை.

ஆனால் என்னுள் வரை சென்று இது நின்று விடவில்லை. மாறாக, அதனுடைய தாக்கம் நம்முடைய நபி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மற்றும் எல்லாம் வல்ல இறைவன் வரை சென்றடைகிறது என்பதை நான் கூறுகின்றேன்.

ஆக இப்படிப்பட்ட தருணம் மற்றும் சூழ்நிலையில் நீங்கள் நன்றாக கூர்ந்து இதைக் கேளுங்கள். இந்த நற்செய்தியிலிருந்து நீங்கள் பங்கு பெற விரும்புகின்றீர்கள் என்றால் அதைப் பெறுவதற்காக தகுதியும் அதற்கான லட்சியமும் உங்களிடம் இருக்குமென்றால் மேலும் இத்தகு பெரிய வெற்றியைப் (இறுதி நாள் வரை நிராகரிப்பவர்கள் மீது மேலோங்கி நிற்பீர்கள்) பெறுவதற்கான உண்மையான ஆவல் உங்களிடம் இருக்கும் என்றால் நீங்கள் லவ்வாமா என்ற அந்தத் தீய குணங்களை உடைத்தெறிந்து مُطْمَئِنَّه என்ற (மினார்) உயர் கோபுரத்தை அடையும் வரை இந்த வெற்றியை ஒருபோதும் நீங்கள் பெற முடியாது என்பதை நான் கூறுகின்றேன்.

இதை விட அதிகமாக நான் வேறொன்றையும் உங்களுக்குக் கூற முடியாது. நீங்கள் அனைவரும் அல்லாஹ்வின் புறமிருந்து அனுப்பப்பட்டவருடன் ஒரு உறுதிவாய்ந்த தொடர்பை ஏற்படுத்தி உள்ளீர்கள். ஆகவே அவருடைய கூற்றுக்களை உள்ளத்தின் காதுகளை கொண்டு கேளுங்கள். மேலும் அவற்றை செயல்படுத்துவதற்காக எப்போதும் ஆயத்தமாக இருங்கள். இவ்வாறு நீங்கள் நடந்தால் நம்பிக்கை கொண்ட பிறகு நிராகரித்தல் என்ற தூய்மையற்ற அசுத்தத்தில் விழுந்து நிரந்தரமான ஆக்கினைக்கு ஆளானவர்களைப் போல நீங்கள் ஒருபோதும் ஆகிவிட மாட்டீர்கள் என்பதே என்னுடைய கூற்றாகும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 85–89, 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

**திருக்குர்ஆனிலிருந்து...**

எங்கள் இறைவா! உங்கள் இறைவனிடத்து நம்பிக்கை கொள்ளுங்கள் என்று (கூறி), நம்பிக்கையின் பால் அழைக்கும் ஓர் அழைப்பாளரிடன் குரலை நிச்சயமாக நாங்கள் செவியேற்றோம். எனவே நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம். (ஆகவே) எங்கள் இறைவா! நீ எங்கள் பாவங்களை மன்னிப்பாயாக. எங்கள் தீமைகளை எங்களிடமிருந்து அகற்றுவாயாக. எங்களை நல்லடியார்களுடன் மரணிக்கச் செய்வாயாக. (3:194)

A.Basheer Ahmad, Melapalayam

## இல்ஹாம் மற்றும் கனவு தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பொன்மொழிகளிலிருந்து....

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

இந்தக் காலத்தில் எவ்வாறு நூற்றுக்கணக்கான குழப்பங்களும், மார்க்கத்தில் புதிதாக புகுத்தப்படும் விஷயங்களும் உருவாகி இருக்கின்றனவோ அவ்வாறே இத்தகைய ஒரு பெரும் குழப்பமும் உருவாகி இருக்கின்றது. எந்த நிலையில் ஒரு கனவு அல்லது இல்ஹாம் நம்புவது தகுதியுள்ளதாக இருக்கின்றது? மேலும் எந்த நிலைமைகளில் அது இறைவனின் வார்த்தையாக அல்லாமல் ஷைய்த்தானின் வார்த்தையாக இருக்கின்றது?

இறைவன் கூறும் விஷயமாக இல்லாமல் மனதில் எழும் விஷயமாக இருக்கின்றது என்பதைப் பற்றி பெரும்பாலான மக்கள் அறியாமல் இருக்கின்றார்கள். ஷைய்த்தான் மனிதனின் கடுமையான எதிரியாக இருக்கின்றான் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். அவன் பல்வேறு வழிகள் மூலமாக மனிதனை அழிக்க விரும்புகின்றான்.

ஒரு கனவு உண்மையானதாக இருக்கலாம். அவ்வாறு இருந்தும் அது ஷைய்த்தான் தரப்பிலிருந்தும் வந்ததாக இருக்கலாம். ஒரு இல்ஹாம் உண்மையானதாக இருக்கலாம். அவ்வாறு இருந்தும் ஷய்த்தான் தரப்பிலிருந்தும் வந்ததாக இருக்கலாம். ஏனென்றால், ஷய்த்தான் பெரிய பொய்யனாக இருந்தாலும் கூட சில நேரங்களில் ஈமானைப் பறிப்பதற்காக உண்மையான விஷயத்தைக் கூறி ஏமாற்றி விடுகின்றான்.

ஆனால் எந்த மக்கள் தமது உண்மை, நன்றியுணர்வு மற்றும் இறைவன் மீதுள்ள பேரன்பில் முழுமையான தகுதியை அடைந்து விடுகின்றனரோ அவர்கள் மீது ஷைய்த்தானால் ஆதிக்கம் செலுத்த முடியாது. இதைப்பற்றி அல்லாஹ் இன்ன இபாதீ லைஸலக அலைஹிம் சுல்தான் அதாவது நிச்சயமாக என்னுடைய அடியார்கள் மீது அவனது ஆதிக்கம் இருக்க முடியாது என்று கூறுகின்றான்.

எனவே, இத்தகையவர்களின் அடையாளம் இதுவாகும். அதாவது இறைவனது அருளின் மழைகள் அவர்கள் மீது பொழிகின்றது. இறைவனால் அவர்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றனர் என்பதற்கான ஆயிரக்கணக்கான அடையாங்களும், முன்மாதிரிகளும் அவர்களிடம் இருக்கின்றன. ஆனால், வேதனை என்னவென்றால் பெரும்பாலான மக்கள் இப்போது ஷைய்த்தானின் பிடியில் கைதாகி இருக்கின்றனர். ஆனால், அவ்வாறு இருந்தும் கூட தங்களது கனவுகள் மற்றும் இல்ஹாம்கள் மீது நம்பிக்கை வைத்தவாறு இந்த கனவுகள் மற்றும் இல்ஹாம்கள் மூலமாக தங்களது நேர்மையற்ற கொள்கைகளையும், தூய்மையற்ற கோட்பாடுகளையும் வளர்ச்சியடையும்படி செய்ய விரும்புகின்றனர்.

இன்னும் சொல்வதென்றால் தங்களுக்கு சாட்சி பகரும் வகையில் அந்த கனவுகளையும் இல்ஹாம்களையும் அவர்கள் எடுத்துக் கூறுகின்றனர். அல்லாஹ் இத்தகைய கனவுகள் மற்றும் இல்ஹாம்களை எடுத்துக்கூறி உண்மையான மார்க்கத்தை இவற்றின் மூலமாக இழிவுபடுத்த வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்களாக அவர்கள் இருக்கின்றனர். அல்லது இறைவனது தூய நபிமார்களை மக்களது பார்வையில் சாதாரண மனிதர்களைப் போன்று அவர்கள் காட்டுகின்றனர்.

அல்லது கனவுகள் மற்றும் இல்ஹாம்கள் மூலமாக எந்தவொரு மார்க்கத்தின் உண்மையாவது நிரூபிக்கப்பட முடியுமென்றால் பிறகு எங்களது மார்க்கத்தையும் வழிமுறையையும் உண்மையானதாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதை அவர்கள் காட்ட விரும்புகின்றனர். அவர்களில் சிலர் தங்களது கனவுகளையும், இல்ஹாம்களையும் தங்களது மார்க்கத்தின் உண்மைக்காக எடுத்துக் கூறுபவர்களாகவும் இருக்கின்றனர். அவர்கள் அத்தகைய கனவுகளையும், இல்ஹாம்களையும் எடுத்துக் கூறுவதன் நோக்கம், கனவு மற்றும் இல்ஹாம் ஓர் உண்மையான மார்க்கத்தையும் அல்லது உண்மையான மனிதனையும் இனங்கண்டு கொள்வதற்கான அளவுகோல் மட்டுமல்ல என்பதை மட்டும் கூறுவதற்காகவே ஆகும்.

சிலர் வீணாகவும் பெருமையாகவும் தங்களது கனவுகளை பிறருக்கு கூறக்கூடியவர்களாக இருக்கின்றனர். சிலர் இவ்வாறும் இருக்கின்றனர். அவர்களுக்கு வந்துள்ள சில கனவுகள் அல்லது இல்ஹாம் அவர்களது பார்வையில் உண்மையானவையாக இருந்து விட்டால் அவற்றை அடித்தளமாக வைத்து அவர்கள் தங்களை இமாம்கள் அல்லது தலைவர்கள் அல்லது தூதர்கள் ஆகியோரின் வடிவில் தங்களை எடுத்துக் காட்டுகின்றனர்.

இந்த நாட்டில் மிகவும் அதிகரித்து வருகின்ற தீமைகள் இவையாகும். இத்தகைய மக்களிடம் மார்க்கப்பற்றும், நேர்மையும் இருப்பதற்குப் பகரமாக வீணான அகங்காரமும், தற்பெருமையும் உருவாகி விட்டது. எனவே, உண்மையையும், பொய்யையும் பிரித்தறிந்து கொள்வதற்காக இந்த நூலை எழுத வேண்டும் என்பதை நான் பொருத்தமானதாகக் கருதினேன். ஏனென்றால், சில குறைவான அறிவையுடைய மக்கள் இத்ததைகய மக்களின் காரணமாக சோதனையில் வீழ்ந்து விட்டனர் என்பதை நான் பார்க்கின்றேன்.

குறிப்பாக அவர்கள் இத்தகைய விஷயங்களைப் பார்க்கின்றனர். உதாரணமாக, ஸைது என்பவர் தனது கனவு மற்றும் இல்ஹாமின் மீது நம்பிக்கை வைத்தவாறு அவருக்கு எதிராக நிற்கின்ற இறையறிவிப்பை பெற்றுள்ள இன்னொரு நபரான பக்ர் என்பவரை காஃபிர் என்று கூறுகின்றார். இறையறிவிப்பைப் பெற்றுள்ள இன்னொரு நபரான காலித் என்பவர் இந்த இருவருக்கு எதிராகவும் குஃப்ர் பத்வா கொடுத்து விடுகின்றார். மேலும் வியக்கத்தக்க விஷயம் என்னவென்றால் இந்த மூவருமே தமது கனவுகளும், இல்ஹாம்களும் உண்மையானவையாக இருக்கின்றன என்று வாதமும் செய்கின்றனர்.

மேலும் தாங்கள் செய்த சில முன்னறிவிப்புகள் தொடர்பாக அவை உண்மையான முறையில் நிறைவேறி விட்டதற்கான சாட்சியங்களையும் அவர்கள் எடுத்துக் கூறுகின்றனர். பிறகு இத்தகைய முரண்பாடுகள், பரஸ்ரம் ஒருவர் மற்றவரைப் பொய்ப்படுத்துவது மற்றும் மறுத்தல் ஆகியவற்றைக் கண்டு அந்த மக்களுக்குக் கடுமையான தடுமாற்றம் ஏற்பட்டு விடுகின்றது. ஏனென்றால், இறைவன் ஒருவனாக இருக்கின்ற போது அவன் ஸைதிற்கு ஓர் இறையறிவிப்பை தந்து விட்டு பக்ருக்கு அதற்கு எதிரான ஓர் இறையறிவிப்பையும், காலிதிற்கு வேறோர் இறையறிவிப்பையும் ஏன் வழங்க வேண்டும்? இதன் மூலமாக அறிவற்றவர்களுக்கு இறைவனின் இருப்பின் மீதே சந்தேகம் ஏற்பட்டு விடும்.

### திருக்குர்ஆனிலிருந்து...

எங்கள் இறைவா! நீ உன் தூதர்கள் மூலம் எங்களுக்கு வாக்களித்தவற்றை(யெல்லாம்) எங்களுக்குத் தருவாயாக. மேலும் மறுமை நாளில் எங்களை இழிவுபடுத்தி விடாதிருப்பாயாக. நிச்சயமாக நீ வாக்குறுதி மீறுவதில்லை. (3:195)

M.Y. Shahul Hameed, Melapalayam

சுருக்கமாக, இத்தகைய விஷயங்கள் பொது மக்களிடம் அச்சத்தை ஏற்படுத்தக்கூடிய விஷயமாக இருக்கின்றது. அம்மக்களின் பார்வையில் நபித்துவத்தின் தொடர் இதன் மூலமாக சந்தேகத்திற்குரியதாக ஆகிவிடுகின்றது. இந்த இடத்தில் பொது மக்களை வியப்பில் ஆழ்த்தக்கூடிய இன்னொரு விஷயமும் இருக்கின்றது. அது என்னவென்றால், சில குழப்பவாதிகள், தீயவர், விபச்சாரி, அநீதி இழைப்பவர், மார்க்கமற்றவர், திருடர், ஹராமானவற்றை உண்பவர், இறைவனது கட்டளைக்கு எதிராக செயல்படுபவர் ஆகியோருக்கு கூட சில நேரங்களில் உண்மையான கனவுகள் வருவதை நாம் பார்க்கின்றோம்...

சுருக்கமாக கூறுவதென்றால், இத்தகைய கனவுகளும் இல்ஹாம்களும் பல்வேறு வகையான மக்களுக்கு வந்து கொண்டே இருக்கின்றன. இன்னும் சொல்வதென்றால் சில நேரங்களில் அவை உண்மையானவையாகவும் இருக்கின்றன. இவ்வாறு இல்ஹாம் மற்றும் வஹி தமக்கு வருவதாக வாதம் செய்கின்ற அத்தகைய மக்களில் ஐம்பதிற்கும் அதிகமானோர் இந்த நாட்டில் இருக்கின்றனர். இத்தகைய மக்களின் வட்டம் எந்த அளவு விரிவானதாக இருக்கின்றதென்றால் உண்மையான மார்க்கத்திற்கும் நன்னடத்தைக்கும் எந்தவொரு நிபந்தனையும் இல்லாமல் இருந்திருந்தால் அந்நிலையில் இந்த சிக்கலுக்கான தீர்வை காண்பதற்காக தனது உள்ளத்தில் அதற்கான தேவையை உணராத எந்தவோர் அறிவுள்ள மனிதரும் இருக்க மாட்டார்.

அதாவது இவர்களுக்கிடையிலுள்ள வித்தியாசத்தை நாம் எவ்வாறு நிலைநாட்ட முடியும். குறிப்பாக மார்க்க மற்றும் கொள்கை வேறுபாடுகள் இருந்தும் கூட ஒவ்வொரு பிரிவை சார்ந்த மக்களுக்கும் கனவுகளும், இல்ஹாம்களும் வருகின்றன என்பதற்கான ஆதாரமும் கூட கிடைத்திருக்கின்றது. அவர்களில் பரஸ்பரம் ஒருவர் மற்றவரை தங்களது கனவுகள் மற்றும் இல்ஹாம்கள் மூலமாக பொய்யராக்கி விடுகின்றனர். ஒவ்வொரு பிரிவை சார்ந்தவர்களின் சில கனவுகள் உண்மையானவையாகவும் இருக்கின்றன. இந்நிலையில் உண்மையை வேண்டுபவர்களின் வழியில் இதுவோர் அபாயகரமான கல்லாக இருப்பது வெளிப்படையான விஷயமாகும்.

குறிப்பாக தங்களுக்கு இல்ஹாம் வருவதாக வாதம் செய்கின்றவர்களுக்கும் இறைவனிடமிருந்து இந்த இல்ஹாம்கள் தங்களுக்கு வருகின்றன என்று எண்ணுபவர்களுக்கும் இது ஓர் அழிக்கக்கூடிய விஷயமாக இருக்கின்றது. உண்மையான இறைவனுடன் அவர்களுக்கு எந்த தொடர்பும் இல்லை. அவர்களது ஏதாவதொரு கனவு உண்மையானதாக இருந்து விட்டால் இந்த ஏமாற்றத்தின் காரணமாக அவர்கள் தங்களை ஒரு பொருட்டாக கருதுகின்றனர். இவ்வாறு அவர்கள் உண்மையை வேண்டுவதிலிருந்தும் விலகி விடுகின்றனர். இன்னும் சொல்வதென்றால் உண்மையை அற்பமான மற்றும் இழிவான பார்வையுடன் அவர்கள் பார்க்கின்றனர்.

எனவே, இந்த விஷயம் தான் இந்த வித்தியாசத்தை உண்மையை வேண்டுபவர்களுக்கு வெளிப்படுத்திக் காட்டுவதற்கு என்னை தூண்டியது.

(ஹகீகத்துல் வஹீ, ரூஹானி கஸாயின், தொகுதி 22 பக்கம் 3 – 7)

---

அடிக்குறிப்பு: எவ்வாறு ஒரு சூரியனை மேகங்கள் சூழ்ந்திருக்கும் போது மறுபுறம் அத்துடன் தூசியும் எழுந்தால் அந்நிலையில் சூரியனின் வெளிச்சம் தெளிவாக பூமியில் விழாதோ அவ்வாறே நஃப்ஸின் மீது ஒருவரது சொந்த இருளும் ஷய்த்தானின் ஆதிக்கமும் இருந்து விட்டால் பிறகு ஆன்மீக சூரியனின் ஒளியும் தெளிவாக அவர் மீது படிய முடியாது. படிப்படியாக அந்த தூசியும் மேகமும் குறைந்து கொண்டே செல்ல செல்ல ஒளியும் தெளிவாக தெரிய ஆரம்பித்து விடும். இதுவே இறைவனின் வஹி பற்றிய தத்துவமாகும்.

எவரது உள்ளங்கள் தூய்மையானவையாக இருக்கின்றனவோ அத்தகைய மக்களே தூய்மையான வஹியை பெறுகின்றன. அவர்களுக்கும் இறைவனுக்கும் இடையில் எந்த தடையும் இருப்பதில்லை. பிறகு இதுவும் நினைவில் இருக்க வேண்டும். அதாவது எந்த இல்ஹாமுடன் இறைவனின் உதவியும் மற்றும் அவன் வழங்குகின்ற கண்ணியமும், மதிப்பும் இருக்குமோ அவற்றில் அதற்கான தெளிவான அடையாளங்கள் இருக்கும்.

இறைவன் அவற்றை ஏற்றுக் கொண்டதற்கான அடையாளங்கள் அவற்றில் வெளிப்படும். இறைவனால் ஏற்றுக் கொள்ளப்பட்டவர்களைத் தவிர வேறு எவராலும் அதைப் பெற முடியாது. ஷய்த்தானின் ஆதிக்கத்திலிருந்தும் இவர்கள் வெளியில் இருக்கின்றனர்.

அதாவது பொய்யாக வாதம் செய்கின்ற ஒருவருக்கு ஆதரவாக இறை வல்லமையை வெளிப்படுத்திக் காட்டும் விதத்தில் எந்தவொரு இல்ஹாமும் அவருக்கு வந்திருக்க முடியாது. அவ்வாறே அவரது வாதத்திற்கு சாட்சியாக இருக்கும் வகையில் அவருக்கு கண்ணியத்தை வழங்குவதற்காக எந்தவொரு வழக்கத்திற்கு மாற்றமான மற்றும் தூய்மையான மறைவான செய்தியும் அவருக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்க முடியாது.

**நேர்மையை நேசிப்போம்**
**நேர்மையின்மையை வெறுப்போம்**

## காதியான் ஆண்டு மாநாடு தொடர்பான முக்கிய அறிவிப்பு

2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெறும் காதியான் ஆண்டு மாநாடு தொடர்பாக, இது 125 வது ஆண்டு மாநாடு என்று பத்ர் பத்திரிகையில் அறிவிப்பு செய்யப்பட்டு வந்தது. இந்த வரலாற்று சிறப்புமிக்க மாநாடு தொடர்பாக ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்ய..) அவர்கள் சில குறிப்பான நிகழ்ச்சிகளுக்கான ஒப்புதலை வழங்கியுள்ளார்கள். இது தொடர்பான தகவலை சுற்றறிக்கை மூலமாக ஜமாஅத்திற்கும் தெரிவிக்கப்பட்டது. இதற்கிடையில் ''தாரீகே அஹ்மதிய்யத்'' காதியான் துறையின் ஆய்வின் அடிப்படையில், **2019 ஆம் ஆண்டு நடைபெறும் ஆண்டு மாநாடு 125 வது ஆண்டு மாநாடு அல்ல. மாறாக 126 வது ஆண்டு மாநாடாகும்** என்ற தகவல் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்ய..) அவர்களுக்கு கொடுக்கப்பட்டது. ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்ய..) அவர்கள் மிகுந்த பரிவுடன் இதற்கான ஒப்புதலை வழங்கியுள்ளார்கள். மேலும் நிகழ்ச்சிகளையும் நடத்துவதற்கான வழிகாட்டலை வழங்கியுள்ளார்கள். (செயல் தலைவர், நாஸிர் இஸ்லாஹ்–வ–இர்ஷாத் மர்கஸிய்யா)

## திருக்குர்ஆனிலிருந்து...

பெண்களுக்கு அவர்களின் மஹர்களை மன விருப்புடன் கொடுத்து விடுங்கள். பின்னர் அவர்கள் அதிலிருந்து ஒரு பகுதியினைத் தாங்களாகவே மகிழ்ச்சியுடன் உங்களுக்குத் தந்தால் உங்களுக்கு மகிழ்ச்சி தரக்கூடியதாகவும் முடிவைப் பொறுத்தவரை நல்லதாயும் இருக்குமென அறிந்து கொண்டு நீங்கள் அதை உண்ணுங்கள். (4:5)

S.S.H.Muhammed Lebbai, Melapalayam

EDITOR
Moulvai.O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
Muallim. A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 4 Thursday 07 November 2019 Issue No. 45

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

## மனித குலத்தின் மீது பரிவுடன் நடந்து கொள்வது மிகப்பெரும் இறை வணக்கமாகும்

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஒரு ஹதீஸில் இவ்வாறு வருகின்றது. மறுமையில் அல்லாஹ் தனது சில அடியார்களிடம் நீங்கள் எவ்வளவு தூய்மையானவர்களாக உள்ளீர்கள் என்றால் நான் உங்களிடம் மிகவும் மகிழ்ச்சி அடைந்துள்ளேன். ஏனென்றால், நான் மிகவும் பசியோடு இருந்தேன். அப்போது நீங்கள் எனக்கு உணவு வழங்கினீர்கள். நான் ஆடையில்லாமல் இருந்தேன். நீங்கள் எனக்கு ஆடையை வழங்கினீர்கள். நான் தாகித்த நிலையில் இருந்தேன். நீங்கள் எனக்கு தண்ணீர் தந்தீர்கள். நான் நோயாளியாக இருந்தேன். நீங்கள் என்னை நலம் விசாரிக்க வந்தீர்கள் என்று கூறுவான். அதற்கு அவர்கள் அல்லாஹ்வே, நீ இந்த விஷயங்களை விட்டும் தூய்மையானவன். நாங்கள் உம்முடன் இவ்வாறு நடந்து கொள்ளும் வகையில் நீ எப்படி இருந்திருக்க முடியும்? என்று அல்லாஹ்விடம் கேட்பார்கள். அதற்கு அல்லாஹ், எனது இன்னின்ன அடியார்கள் அவ்வாறு இருந்தனர். நீங்கள் அவர்களது தேவைகளை நிறைவேற்றினீர்கள். அது நீங்கள் என்னுடன் நல்ல முறையில் நடந்து கொண்டது போன்றதே ஆகும் என்று கூறுவான்.

பிறகு அல்லாஹ்வின் முன்னிலையில் இன்னொரு பிரிவினர் கொண்டு வந்து நிறுத்தப்படுவர். அவர்களிடம் அல்லாஹ், நீங்கள் என்னுடன் தீய முறையில் நடந்து கொண்டீர்கள். நான் பசியுடன் இருந்தேன். நீங்கள் எனக்கு உணவு வழங்கவில்லை. நான் தாகத்துடன் இருந்தேன். நீங்கள் எனக்கு தண்ணீர் வழங்கவில்லை. நான் ஆடையில்லாமல் இருந்தேன். நீங்கள் எனக்கு ஆடையை வழங்கவில்லை. நான் நோயாளியாக இருந்தேன். நீங்கள் என்னை நலம் விசாரிக்கவில்லை என்று கூறுவான். அதற்கு அவர்கள் அல்லாஹ்வே, நீ அத்தகைய விஷயங்களை விட்டும் தூய்மையானவன். உன்னுடன் நாங்கள் இவ்வாறு நடந்து கொள்வதற்கு நீ எப்போது அத்தகைய நிலைமையில் இருந்தாய் ? என்று அவர்கள் கேட்பார்கள். அதற்கு அல்லாஹ், எனது இன்னின்ன அடியார்கள் இந்த நிலைமையில் இருந்தனர். நீங்கள் அவர்களுடன் எவ்வகையிலும் அனுதாபத்துடன் நடந்து கொள்ளவில்லை. எனவே அவர்களுடன் நீங்கள் நல்ல முறையில் நடந்து கொள்ளாமல் இருந்தது என்னுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளாதது போன்றதே ஆகும் என்று கூறுவான்.

சுருக்கமாக, மனித குலத்தின் மீது பரிவு காட்டுவதும் அதனோடு அனுதாபத்துடன் நடந்து கொள்வதும் மிகப்பெரும் இறை வணக்கமாகும். அல்லாஹ்வின் திருப்தியை பெறுவதற்கு இது ஒரு மிகச்சிறந்த வழியாகும். ஆனால் இந்த அம்சத்தில் மிகப்பெரும் பலகீனம் வெளிப்படுத்தப்படுவதை நான் காண்கின்றேன். மற்றவர்களை இழிவாக கருதுகின்றனர். அவர்கள் மீது கோபப்படுகின்றனர். அவர்களை கவனிப்பது ஏதாவதொரு துன்பத்தில் துயரத்தில் அவர்கள் இருக்கும் போது அவர்களுக்கு உதவி செய்வது என்பது மிகப்பெரிய விஷயமாகும். எவர்கள் ஏழை மக்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்வதில்லையோ மேலும் அவர்களை இழிவாக கருதுகின்றனரோ அவர்கள் சுயமே அந்த துன்பத்தில் ஆழ்ந்து விடக்கூடாதே என்ற அச்சம் எனக்கு இருக்கின்றது. அல்லாஹ் எவர்கள் மீது அருள் செய்துள்ளானோ அவர்கள் இறைவனுக்கு நன்றி தெரிவிப்பது இதுவேயாகும். அதாவது அவனது படைப்பினங்களுக்கு நன்மை செய்ய வேண்டும். அவர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ள வேண்டும். இறைவன் அவர்களுக்கு வழங்கிய அருளின் காரணமாக அவர்கள் ஆணவம் கொள்ளக் கூடாது. காட்டுமிராண்டிகளைப் போன்று ஏழைகளை வெட்டி சாய்த்து விடவும் கூடாது.

(மல்ஃபூஸாத் தொகுதி 4 பக்கம் 438 – 2003 ஆம் ஆண்டு பதிப்பு)

## நீங்கள் முஸ்லிம்களோடு மட்டும் அனுதாபத்துடன் நடந்து கொண்டவாறு அதனை ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் கொண்டு வந்து விடாதீர்கள்

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஆணவத்துடன் நடந்து கொள்பவர் மற்றவர்களுடன் உண்மையான முறையில் அனுதாபத்துடன் நடந்து கொள்பவராக இருக்க முடியாது. நீங்கள் முஸ்லிம்களோடு மட்டும் அனுதாபத்துடன் நடந்து கொண்டவாறு அதனை ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் கொண்டு வந்து விடாதீர்கள். மாறாக, ஒவ்வொருவருடனும் அனுதாபத்துடன் நடந்து கொள்ளுங்கள். ஒரு இந்துவிடம் அனுதாபத்துடன் நடந்து கொள்ளாமல் இருந்தால் இஸ்லாத்தில் உண்மையான முறையில் வலியுறுத்திக் கூறப்படும் கட்டளைகளை அவருக்கு எவ்வாறு எட்ட வைப்பீர்கள். இறைவன் அனைவரையும் படைத்து பரிபாலிக்கக் கூடியவனாக இருக்கின்றான்.

எனினும் முஸ்லிம்களிடம் குறிப்பாக அனுதாபத்துடன் நடந்து கொள்ளுங்கள். பிறகு குறிப்பாக இறையச்சமுடையவர்களுடனும் நல்லவர்களுடனும் அதைவிட அதிகமாக அனுதாபத்துடன் நடந்து கொள்ளுங்கள். செல்வத்துடனும் உலகத்துடனும் உள்ளத்தை ஒன்றச் செய்யாதீர்கள். வியாபாரம் போன்றவற்றை செய்வதை விட்டு விடுங்கள் என்று இதற்குப் பொருளல்ல. மாறாக, உள்ளம் இறைவனை நினைவு கூற வேண்டும். கைகள் பணிகளை செய்து கொண்டிருக்க வேண்டும். வியாபாரம் செய்வதை இறைவன் தடுக்கவில்லை. மாறாக, மார்க்கத்தை விட உலகத்திற்கு முன்னுரிமை வழங்குவதையே அவன் தடுக்கின்றான். எனவே நீங்கள் மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குங்கள். (மல்ஃபூஸாத் தொகுதி 3 பக்கம் 592 – 2003 ஆம் ஆண்டு பதிப்பு)

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தைப் பற்றி அறிந்து கொள்ள:–
www.alislam.org

Love for All Hatred for None
எல்லோரிடத்தும் அன்பு; எவரிடத்தும் இல்லை வெறுப்பு

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad